Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 16 | விலை - 30 ரூபா செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் : 35 கதிர் : 176 வைகாசி 10ஆம் நாள் சனிக்கிழமை 23 மே 2020 வள்ளுவர் ஆண்டு 2051

கொரோனாவிலிருந்து எம்மை நாமே பாதுகாப்போம்



7

அலுவலகத்தில் தளபாடங்களையும் உபகரணங்களையும் தினமும் தொற்று நீக்கி கொண்டு சுத்தப்படுத்துவோம்.

தகவல்: வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களம்

# ஞாயிறு, திங்கள் ஊரடங்கு

யாழ்ப்பாணம், மே 23

நாடு முழுவதும் நாளை இரவு 8 மணிக்கு நடைமுறைக்கு வரும் ஊரடங்குச் சட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 5 மணிக்கே நீக்கப்படும். ஞாயிறு மற்றும் திங்கட்கிழமை ஊரடங்கு முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய இரு மாவட்டங்களிலும் ஊரடங்கு மறு அறிவித்தல் வரை தொடர்ந்தும் நடைமுறையிலிருக்கும். நாளை ஞாயிறு 02

# புலிச் சீருடைகளுடன் மனித என்பு எச்சங்கள்

கிளிநொச்சி, மே 22

கிளிநொச்சி முகமாலையில் கண்ணிவெடி அகற்றப்படும் பகுதியில் மனித எலும்பு எச்சங்கள் நேற்றுக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அந்தப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் சீருடை மற்றும் துப்பாக்கி என்பன 02



# எரிவாயு விலை கூடாது

கொழும்பு, மே 23

சமையல் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்படாது என்று நுகர்வோர் விவகார அதிகார சபை அறிவித்துள்ளது. எந்தவொரு சமையல் எரிவாயு உற்பத்தி நிறுவனமும் எரிவாயுவின் விலையை 02

# பெற்றோல் விலையை குறைத்தது ஐ.ஓ.சி.

கொழும்பு, மே 23

லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் ஒக்ரெய்ன் 92 ரகப் பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலையை 5 ரூபாவால் குறைப்பதற்குத் தீர்மானித்துள்ளது. இந்த விலைக் குறைப்பு நேற்று நள்ளிரவுடன் நடைமுறையாகும் என்று தெரிவிக்கப்பட்டது. அதன்படி 02

# தேர்தலுக்கு தடையில்லை

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளதாக நீதிமன்றில் தெரிவிப்பு

### விசாரணைகள் செவ்வாய் வரை ஒத்திவைப்பு

கொழும்பு, மே 23

நாட்டில் தற்போது காணப்படுகின்ற சூழ்நிலைக்கு மத்தியில் நாடாளுமன்றத் தேர்தல் நடவடிக்கைகளை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியும் என்று சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அனில் ஜாசிங்க, ஜனாதிபதி செயலாளர் பி.பீ.ஜயசுந்தரவுக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளதாக ஜனாதிபதி சட்டத்தரணி றொமேஷ் டி சில்வா உயர்நீதிமன்றத்தில் நேற்று அறிவித்துள்ளார். 02

# அரசை ஒருபோதும் அசைக்க முடியாது

## அடித்துக் கூறுகிறார் மகிந்த

கொழும்பு, மே 23

இந்த அரசை யாராலும் அசைக்கவும் முடியாது; கவிழ்க்கவும் முடியாது என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார். தீர்மானிக்கப்பட்ட திகதியில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்த முடியாது என்றால் பிறிதொரு திகதியில் தேர்தலை தேர்தல்கள் ஆணைக்குழு நடத்தியே 02

# தீர்ப்பின் பின்னரே தீர்மானம்

## மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

கொழும்பு, மே 23

ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த நாடாளுமன்றத் தேர்தல் திகதியை சவாலுக்குட்படுத்தி உயர்நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில், பொதுத்தேர் 02

# மாணவர்களின் பாதுகாப்பு உறுதியானால் பாடசாலை!

## கல்வி அமைச்சர் திட்டவட்டம்

கொழும்பு, மே 23

மாணவர்களின் பாதுகாப்பு நூறு வீதம் உறுதி செய்யப்படும்வரையில் பாடசாலைகள் மீளத்திறக்கப்படாது என்று கல்வி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார். மாத்தறையில் 13

# இரு இளைஞர்களின் மீது கொலைவெறித் தாக்குதல்

- ஒருவர் ஆபத்தான நிலையில்
- பாண்டியன்தாழ்வில் சம்பவம்

யாழ்ப்பாணம், மே 23

யாழ்ப்பாணம், பாண்டியன்தாழ்வுப் பகுதியில் நடத்தப்பட்ட வாள்வெட்டுத் தாக்குதலில் இளைஞர்கள் இருவர் படுகாயமடைந்துள்ளனர். அவர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் ஆபத்தான நிலைமையில் உள்ளார் என்று தெரிவிக்கப்படு 02

# விமான விபத்தில் 98 பேர் சாவு

கராச்சி, மே 23

பாகிஸ்தானில் நேற்று நடந்த விமான விபத்தில் 98 பேர் உயிரிழந்திருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. அந்த விமானத்தில் 98 02

# முப்படையினருக்கான அதிகாரங்கள் நீடிப்பு!

கொழும்பு, மே 23

பொதுமக்கள் மத்தியில் அமைதியை பேணும் வகையில் முப்படையினரை நாடு முழுவதும் கடமையில் ஈடுபடுத்துவது தொடர்பான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் நேற்று வெளியிடப்பட்டுள்ளது. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் கையொப்பத்துடன் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. 02

# கொரோனா 1068

கொழும்பு, மே 23

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுடன் மேலும் 13 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 1,068 ஆக அதி 02

# முல்லைத்தீவில் கடற்படையினர் 6 பேருக்கு கொரோனா தொற்று

முல்லைத்தீவு, மே 23

முல்லைத்தீவு கேப்பாப்பிலவு விமானப் படைத்தளத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த கடற்படையினர் 6 பேருக்குக் கொரோனாத் தொற்று இருப்பது பரிசோதனைகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.சுகந்தன் தெரிவித்தார். 02

## ஞாயிறு...

மற்றும் நாளைமறுதினம் திங்கள் ஆகிய இரு தினங்களும் நாடு முழுவதும் ஊரடங்கு முழுமையாக நடைமுறையிலிருக்கும்.

கொழும்பு மற்றும் கம்பஹா தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் நாளை சனி இரவு 8 மணி முதல் நடைமுறைப்படுத்தப்படும் ஊரடங்கு எதிர்வரும் செவ்வாய் அதிகாலை 5 மணிக்கு தளர்த்தப்படும். இந்த மாவட்டங்களில் ஊரடங்கு தினமும் இரவு 8 மணி முதல் அதிகாலை 5 மணி வரை மறுஅறிவித்தல் வரை தொடர்ந்தும் நடைமுறையிலிருக்கும்.

கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய இரு மாவட்டங்களிலும் ஊரடங்கு நடைமுறையிலிருந்தபோதும் இயல்பு வாழ்க்கையை வழமை நிலைக்கு கொண்டு வருவதற்காக ஆரம்பிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் நாளையும் நடைமுறையில் இருக்கும் அதேநேரம் எதிர்வரும் செவ்வாய் முதல் முன்னர் போன்று தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்.

முன்னர் வெளியிடப்பட்ட அறிவித்தல்களில் குறிப்பிடப்பட்ட ஊரடங்குடன் தொடர்புடைய நிபந்தனைகளில் எவ்வித மாற்றங்களும் இல்லை என்றுள்ளது. (ஓ.5,44,22)

## அரசை...

தீரும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் தீர்மானங்களை எவரும் சவாலுக்குட்படுத்த முடியாது. எதிரணியினர் உயர்நீதிமன்றத்தை நாடி எந்தப் பயனையும் பெறமாட்டார்கள். அவர்களின் ஆட்டம் விரைவில் முடிவுக்கு வந்துவிடும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் முக்கியஸ்தர்களுடன் நேற்று நடத்திய கலந்துரையாடலின்போதே பிரதமர் மஹிந்த மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நாடாளுமன்றக் கலைப்பு மற்றும் தேர்தல் திகதி தொடர்பில் உயர்நீதிமன்றம் எந்தத் தீர்ப்பை வழங்கினாலும் எக்காரணம் கொண்டும் பழைய நாடாளுமன்றத்தை ஜனாதிபதி மீளக்கூட்டவே மாட்டார்.

பொதுத்தேர்தலின் பின்னர் புதிய நாடாளுமன்றம் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான ஆட்சியில் கூடுவது உறுதி.

தோல்விகள் எமக்கு நிரந்தரமல்ல. வெற்றிகள்தான் எம்மை முன்னோக்கிக் கொண்டு செல்கின்றன. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் எமக்குக் கிடைத்த வெற்றி வரலாற்று வெற்றி; மாபெரும் வெற்றி. எனவே, பொதுத்தேர்தலிலும் கட்சியிலுள்ள அனைவரினதும் பங்களிப்பு மிகவும் அவசியம். அப்போதுதான் நாம் மாபெரும் வெற்றியுடன் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சியை நடத்தலாம். மக்களின் நம்பிக்கையாளர்களாக நாம் தொடர்ந்து செயற்பட வேண்டும். எதிரணியினரின் வேண்டத்தகாத பல்வேறு விமர்சனங்களுக்கு மத்தியில் கொரோனா வைரஸை இல்லாதொழிக்கும் எமது பணி தொடர்கின்றது. இதில் முப்படையினரினதும் பொலிஸாரினதும் மருத்துவத்துறையினரினதும் சேவைகள் அளப்பரியவை.- என்றார். (எ-22)

## புலிச்...

வும் மீட்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் பொலிஸாருக்கு கண்ணிவெடி அகற்றும் செயற்பாட்டில் ஈடுபட்டுவரும் நிறுவனப் பணியாளர்களால் தகவல் வழங்கப்பட்டது. பளைப் பொலிஸார் கிளிநொச்சி நீதிமன்றத்துக்கு அறிக்கையிட்டனர். கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதிபதி சம்பவ இடத்துக்குச் சென்று ஆராய்ந்தார். எதிர்வரும் 26ஆம் திகதி அந்தப் பகுதியில் அகழ்வுப் பணிகளை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.

2008ஆம் ஆண்டு இந்தப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை இராணுவத்தினருக்கும் இடையே போர் நடந்திருந்தது. இந்தப் பகுதி தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னரங்கப் பகுதியாகக் காணப்பட்டது. (எ-214,6)

## முப்படையின...

கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதலின் பின்னர் நடைமுறைப்படுத்தப்பட்ட அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டதையடுத்து, பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ், ஜனாதிபதியால் பாதுகாப்பு நடவடிக்கையில் முப்படையினர் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இந்த நடைமுறை வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் நீடிக்கப்பட்டு வருகின்றது.

அரசமைப்பின் 40ஆம் அத்தியாயத்தில், பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 12ஆம் பிரிவால் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. பொதுமக்களின் அமைதியைப் பேணுவதற்கான அதிகாரம் இதன் மூலம் தரைப்படை, கடற்படை மற்றும் வான்படை ஆகியவற்றுக்கு வழங்கப்பட்டுள்ளது.

நிர்வாக மாவட்டங்களான கொழும்பு, கம்பஹா, களுத்துறை, நுவரெலியா, காலி, மாத்தறை, ஹம்மாந்தோட்டை, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, புத்தளம் மற்றும் நாட்டுக்கு உரித்தான கடல்பகுதி உள்ளடங்கிய கடற்கரை ஆகியனவும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. கண்டி, மாத்தளை, கிளிநொச்சி, வவுனியா, குருணாகல் அனுராதபுரம், பொலனறுவை, பதுளை, மொனராகலை, இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய நிர்வாக மாவட்டங்களும் இதற்குள் உள்ளடங்கின்றது. (எ)

## விமான...

பேர் பயணித்திருந்த நிலையில் நேற்றிரவுவரை 37 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன என்று அந்த நாட்டு ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இந்த விமானம் கராச்சியில் இருந்து லாகூருக்குச் சென்றிருந்த நிலையில் ஜின்னா சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கும்போது விபத்துக்குள்ளாகியுள்ளது.

விமானத்தைத் தரையிறக்க எடுத்த முதல் முயற்சி தோல்வியடைந்தது. அதையடுத்து விமானம் மீண்டும் மேலே மும்பி வட்டமடித்து இரண்டாவது தடவையாகத் தரையிறங்க முயற்சிக்கப்பட்டது. இந்த விடயம் கட்டுப்பாட்டு அறைக்குத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து, விமான நிலையத்தின் இரு ஓடுதளங்களில் எங்கு வேண்டுமானாலும் தரையிறங்க முடியும் என்று அதிகாரிகள் விமானிக்கு அறிவித்துள்ளனர்.

அப்போது பேசிய விமானி, "லாண்டிங் கியரில் பிரச்சினை ஏற்பட்டுள்ளது" என்று கட்டுப்பாட்டு அறையில் இருந்த அதிகாரிகள் கூறியுள்ளனர். இரண்டாவது தடவையாகத் தரையிறங்க முயற்சிக்கப்பட்டு, தரையிறங்க சில நிமிடங்கள் இருக்கத்தக்கதாக விமானி "விமானத்தின் இயந்திரம் செயல் இழந்து விட்டது" என்று கட்டுப்பாட்டு அறை அதிகாரிகளுக்குக் கூறியுள்ளார்.

இவை நடந்த சில நிமிடங்களிலேயே விமானம் மக்கள் அதிகம் வசிக்கும் மாலிர் நகர், குடியிருப்புப் பகுதியில் விழுந்து விபத்துக்குள்ளானது.

விமானத்தில் பயணம் செய்த அனைவரும் உயிரிழந்திருக்கக்கூடும் என்று கராச்சி மேயர் வாசிம் அக்தர் தெரிவித்துள்ளார். அதேவேளை விமானம் விழுந்து விபத்துக்கான இடம் மக்கள் அதிகம் உள்ள பகுதி என்பதால் உயிரிழப்புக்கள் அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகின்றது. (எ)

## கொரோனா...

கரித்துள்ளது என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

தொற்றுக்குள்ளாகியவர்களில் 6 பேர் குணமடைந்து நேற்று வீடு திரும்பியுள்ளனர். தொற்றிலிருந்து பூரண குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 620 ஆக உயர்ந்துள்ளது.

இதுவரை தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களில் 9 பேர் உயிரிழந்துள்ள நிலையில் தற்போது 439 நோயாளிகள் 8 மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 110 பேர் சந்தேகத்தின் அடிப்படையில் மருத்துவமனைகளில் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். (எ-22)

## தீர்ப்பின்...

தல் தொடர்பில் எமது செயற்பாடுகளை இப்போது முன்னெடுக்க முடியாது. நீதிமன்றத் தீர்ப்பின் பின்னரே எமது அடுத்தகட்ட பணிகளை நாம் ஆரம்பிக்கலாம். அவை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கவும் முடியும்.

இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

நீதிமன்றத் தீர்ப்பு எப்படி அமைந்தாலும் ஏற்கனவே திட்டமிட்டமாறு ஜூன் மாதம் 20ஆம் திகதி பொதுத்தேர்தலை நடத்துவது கடினம். பிறிதொரு தினத்தில்தான் நாடாளுமன்றத் தேர்தலை நடத்த வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கின்றோம். எனினும், நீதிமன்றத் தீர்ப்பின் பின்னரே எமது அடுத்தகட்ட நடவடிக்கைகளைப் பகிரங்கமாகத் தெரிவிக்க முடியும். அதுவரைக்கும் நாம் பொறுமை காக்க வேண்டும்-என்றார். (எ-22)

## தேர்தலுக்கு...

நாடாளுமன்ற ஒத்திவைப்புக்கு எதிரான மனுக்கள் மீதான விசாரணையின் ஐந்தாம் நாளான நேற்று ஜனாதிபதியின் செயலாளர் சார்பில் உயர் நீதிமன்றத்தில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா தனது வாதத்தின்போது இதனை தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியோர் குணமடையும் வீதம் அதிகரித்துள்ளமை மற்றும் உயிரிழப்பு வீதம் வெகுவாக குறைவடைந்துள்ளமை ஆகியன இலங்கையில் கொரோனா வைரஸ் ஒழிப்பைவெற்றிகரமாகமுன்னெடுத்துள்ளதை சுட்டிக்காட்டுவதாக சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம், கடிதம் மூலம் அறிவித்துள்ளதாக ரொமேஷ் டி சில்வா மன்றில் குறிப்பிட்டுள்ளார்.

உலக சுகாதார நிறுவனத்தின் பரிந்துரைகளுக்கு அமைய அரசு தனிமைப்படுத்தல்நடவடிக்கைகளைமுன்னெடுத்துள்ளதாகவும், சுகாதார நடைமுறைகளை எதிர்வரும் காலங்களிலும் பின்பற்றுதல் அவசியம் எனவும் சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் மேலும் குறிப்பிட்டுள்ளதாக ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா கூறியுள்ளார்.

எவ்வாறாயினும், வைரஸ் ஒழிப்புக்கான மருந்து இதுவரை கண்டுபிடிக்கப்படாத நிலையில், வைரஸ் தொற்று எச்சரிக்கை தொடர்ந்தும் காணப்படுவதாக சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அனில் ஜாசிங்க சுட்டிக்காட்டியுள்ளார் என்று ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா உயர்நீதிமன்றத்தில் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

**தள்ளுபடி செய்யவும்**

நாடாளுமன்ற ஒத்திவைப்புக்கெதிரான மனுக்களை பரிசீலனைக்கு எடுக்காமலேயே தள்ளுபடி செய்யுமாறு சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா இன்று உயர்நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

**ஒத்திவைப்பு**

நாடாளுமன்ற ஒத்திவைப்புக்கெதிரான மனுக்களை ஆராய்வதை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை வரை ஒத்திவைத்தது உயர்நீதிமன்றம். (ஓ.5)

## இரு...

கின்றது.

இந்தச் சம்பவம் நேற்றிரவு 7.15 மணியளவில் பாண்டியன்தாழ்வு சந்தனமாதா கோயிலுக்கு முன்பாக நடந்துள்ளது.

ஓட்டோவில் இருந்த இருவரை மோட்டார் சைக்கிள்களில் வந்த கும்பல் ஒன்று தாக்கி விட்டுத் தப்பிச் சென்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

அந்த இடத்தைச் சேர்ந்த சசிகரன் (வயது 27) என்பவரே தலையில் படுகாயமடைந்த நிலையில் ஆபத்தான நிலைமையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். ஓட்டோச் சாரதியும் படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும், பாசையூர் பகுதியைச் சேர்ந்த குழுவொன்றே தாக்குதலை மேற்கொண்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ,26)

## முல்லைத்தீவில்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தனிமைப்படுத்தலுக்காக வெலிசறையிலிருந்து கேப்பாப்பிலவு விமானப் படைத்தளத்துக்கு 399 கடற்படையினர் கொண்டுவரப்பட்டனர். அவர்களில் 99 பேருக்கு கடந்த 19ஆம் திகதி பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அவர்களில் 40 பேரின் பரிசோதனை முடிவுகள் நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டன. இருவருக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. அவர்கள் வெலிகந்த மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

எஞ்சிய 59 பேரின் பரிசோதனை முடிவுகள் நேற்றுக் காலை அறிவிக்கப்பட்டன. கடற்படையினர் 6 பேருக்கு தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. அவர்களும் வெலிகந்த மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். 40 பேருக்கு இன்று சோதனை முன்னெடுக்கப்படவுள்ளது, என்றார். (ஓ.5)

## பெற்றோல்..

பெற்றோல் லீற்றர் ஒன்றின் புதிய விலை 137 ரூபா என்று லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் அறிவித்துள்ளது.

கடந்த வாரம் லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் ஒக்ரெய்ன் 92 ரகப் பெற்றோலின் விலையை 5 ரூபாவால் அதிகரித்திருந்தது. தற்போது லீற்றர் ஒன்றின் விலை 5 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. (எ)

## எரிவாயு...

அதிகரிக்க வேண்டுமென்ற கோரிக்கையை இதுவரை முன்வைக்கவில்லை என்று நுகர்வோர் விவகார அதிகார சபை குறிப்பிட்டுள்ளது. (கு)

# சீரற்ற காலநிலையால் 20,000 பேர் பாதிப்பு

கொழும்பு,மே 23

**இரத்தினபுரி உட்பட நாட்டில் 13 மாவட்டங்களில் பெய்துவரும் அடை மழையால் ஏற்பட்ட வெள்ளம், மண்சரிவு மற்றும் கடும் காற்றால் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். மூவர் உயிரிழந்துள்ளதுடன், நால்வர் காயமடைந்துள்ளனர்.**



அத்துடன், 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் பகுதியளவும், 21 வீடுகள் முழுமையாகவும் சேதமடைந்துள்ளன என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

வெள்ளம் மற்றும் மண்சரிவால் இரத்தினபுரி மாவட்டத்தில் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 17 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆயிரத்து 492 வீடுகள் பகுதியளவும், 20 வீடுகள் முழுமையாகவும் சேதமடைந்துள்ளன. இடம்பெயர்ந்தவர்கள் 7 பாதுகாப்பான நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். ஏனையோர் உறவினர்கள் மற்றும் அயலவர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தில் 225க்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். 281 வீடுகள் பகுதியளவு சேதமடைந்துள்ளன.

கடும் காற்றால் யாழ்ப்பாணத்தில் 9 குடும்பங்களைச் சேர்ந்த 29 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 6 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்விரு மாவட்டங்களிலும் மொத்தமாக 9 வீடுகள் பகுதியளவு சேதமடைந்துள்ளன.

நாட்டில் தற்போது பெய்யும் மழை அடுத்து சில நாள்களுக்கும் தொடரக்கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. (க-44)

## ஹிஸ்புல்லாஹ் மீது முறையான சட்ட நடவடிக்கை இல்லை

### சட்டத்தரணிகள் சங்கத்துக்கு கடிதம்

கொழும்பு,மே 23

சிரேஷ்ட சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் கைது செய்யப்பட்டு நான்கு வாரங்களுக்கு மேற்பட்ட காலம் தடுத்து வைக்கப்பட்டிருந்தாலும், இதுவரையில் முறையான சட்ட நடவடிக்கைகளுக்கு இடமளிக்கப்படவில்லை என்று தெரிவித்து சட்டத்தரணிகள் சங்கத்துக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

185 சட்டத்தரணிகளின் கையொப்பத்துடன் இந்த கடிதம் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

அனைத்து தனி நபர்களினதும் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் சட்டத்தரணிகளின் தொழில்சார் உரிமைகளைப் பாதுகாக்க சட்டத்தரணிகள் என்ற வகையில் நாம் கடமைப்பட்டுள்ளோம் என்று கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குற்றப்புலனாய்வுப் பிரிவினர் ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ்வை நீதிவான் ஒருவர் முன்னிலையில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை. ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ்வுக்கு சட்டத்தரணிகள் உதவியைப் பெற அவர்கள் இடமளிக்காமை போன்ற இரண்டு பிரதான அம்சங்கள் குறித்து சட்டத்தரணிகள் சங்கத்தின் அவதானத்துக்குக் கொண்டு வருவதை, கடிதத்தின் மூலம் எதிர்பார்ப்பதாக கையொப்பமிட்ட 185 சட்டத்தரணிகளும் தெரிவித்துள்ளனர்.

நீதிவான்ஒருவர்முன்னிலையில்முற்படுத்தவேண்டும் என்ற உரிமை ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் விடயத்தில் மீறப்பட்டுள்ளது. உயர்நீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ள ஒரு விடயம் மீறப்பட்டுள்ளபோது, அதற்கு எதிராக சட்டத்தரணிகள் சங்கம் குரல் கொடுப்பது அவசியமாகும்.

அதேபோன்று, சட்டத்தரணிகளின் உதவியைப் பெற்றுக் கொள்ளவும் ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ்வுக்கு அவகாசம் வழங்கப்படவில்லை. இது பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுவதிலிருந்து அனைத்து தனி நபர்களையும் பாதுகாக்கும் சர்வதேச உடன்படிக்கையின் 15 (2) பிரிவை மீறும் செயலாகும்.

இரண்டு விடயங்களும் உயர்நீதிமன்றம் அனுமதித்துள்ள, சர்வதேச உடன்படிக்கைகளில் கூறப்பட்டுள்ளவையாகும். இவை இரண்டும் மீறப்பட முடியாதவையாகும். எனவே, சட்டத்துக்குட்பட்ட மேற்படி விடயத்தில் சட்டத்தரணிகள் சங்கம் முன்னிலையாகுவது முக்கியமாகும் என்பதை சுட்டிக் காட்டுகின்றோம் என்றும் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (க)

## அரசியல்வாதிகள் மீது திட்டமிட்டு சேறுபூசல்

### ஹரின் பெர்னாண்டோ குற்றச்சாட்டு

கொழும்பு,மே 23

அரசாங்கம் தற்போதுள்ள நெருக்கடி நிலைமையிலிருந்து நாட்டையும், நாட்டு மக்களையும் பாதுகாப்பதைக் கவனத்தில் கொள்ளாது, எதிர்த்தரப்பு அரசியல்வாதிகள் மீது திட்டமிட்ட சேறு பூசல்களை முன்னெடுத்து வருகின்றது. இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ குற்றஞ் சாட்டியுள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தற்போதுள்ள நெருக்கடியில் எதிர்த்தரப்பு உறுப்பினர்கள் மீது சேறுபூசல்களை மேற்கொள்வதை விட நாட்டை முன்னேற்றுவது தொடர்பிலே அனைவரும் அவதானம் செலுத்த வேண்டும்.

ஐக்கிய மக்கள் சக்தியை உருவாக்கியதை அடுத்து நாங்கள் தெரிவித்து வந்த எதுவுமே பிழைக்கவில்லை. கொரோனா வைரஸ் தொடர்பில் எச்சரிக்கை விடுத்து வந்த போதிலும், அரசாங்கம் தேர்தலை நடத்தும் எண்ணத்தில் நாட்டை திறந்து வைத்திருந்தமையால் இன்று வைரஸ் பரவலால் பெரும் நெருக்கடியை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

அரசாங்கம் தங்களுக்குச் சார்பான சில ஒப்பந்தக்காரர்கள் மூலம் ஐக்கிய மக்கள் சக்தியின் சிறந்த பேச்சாற்றல் மிக்க உறுப்பினர்களைச் சிறைப்பிடித்து அவர்களை அடைத்து வைத்து விட்டு, தங்களது இஷ்டம் போல் செயற்படுவதற்கு முயற்சிக்கின்றது.

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட காணொலிகளைக் கொண்டு அரசாங்கத்துக்குத் துணைபோகும் சில சதிகாரர்கள் ஊடாக அந்த காணொலிகளை மீள்திருத்தம் செய்து, அதில் அவர்கள் அடக்கி வைக்க எண்ணியிருக்கும் எதிர்த்தரப்பு அரசியல்வாதிகளைத் தொடர்புபடுத்தி, எதிர்த்தரப்பு உறுப்பினர்கள் மீது திட்டமிட்ட சேறுபூசல்களை முன்னெடுத்து வருகின்றனர்.

எம்முடன் தொடர்புடைய சம்பவங்கள் தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொண்டு அதன் உண்மைச் சம்பவம் தொடர்பில் மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

இந்த விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொள்ளவேண்டும். பொலிஸார் மீது எமக்குப் பெரும் மதிப்பு உள்ளது. அவர்கள் அரசாங்கத்துக்குத்துணைபோகாமல் நியாயமான முறையில் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும். எதிர்த்தரப்பு அரசியல்வாதிகளின் தனிப்பட்ட வாழ்க்கை முறையோ, தனிப்பட்ட செயற்பாடுகள் தொடர்பிலோ பேசித்திரிவதற்கான காலமல்ல இது. தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியிலிருந்து நாட்டையும், நாட்டு மக்களையும் மீண்டெழச் செய்வதே முக்கியமான செயற்பாடாகும். - என்றார். (க)

## 800 போதை மாத்திரைகளுடன் இளைஞன் கைது

திருகோணமலை புல்மோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 800 போதை மாத்திரைகளை வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞரொருவர் கைது செய்யப்பட்டார். அவரை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார். இளைஞன் போதைப்பொருள் குற்றத்தடுப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, திருகோணமலை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்டார். (க)

## அரச நிறுவனங்களை மீளமைக்க வேண்டும்

### சபாநாயகர் கோரிக்கை

கொழும்பு,மே 23

அரசதுறை நிறுவனங்கள், அவற்றின் செயற்றிறனையும் உற்பத்தித்திறனையும் மேம்படுத்தும் வகையில் தம்மை மீளக் கட்டமைப்பது அவசியமாகும் என்று சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளதாவது,

இலங்கையின் பெரும்பாலான அரசதுறை நிறுவனங்கள், அவற்றின் செயற்றிறனையும், உற்பத்தித்திறனையும் மேம்படுத்தும் வகையில் தம்மை மீளக்கட்டமைப்பது அவசியமாகும். முறையான நியமனங்கள், சரியான இலக்குகள் மற்றும் அரசியல் தலையீடுகள் தவிர்ப்பு ஆகியவற்றின் ஊடாக தனியார் மயமாக்கலின்றியே அரச நிறுவனங்களின் செயற்றிறனை அதிகரிக்க முடியும்.

இதற்கான சிறந்த முன்னுதாரணத்தை எமது பிராந்தியத்திலுள்ள பல்வேறு நாடுகளும் வழங்கியுள்ளன- என்றுள்ளது. (க)

## தலைப்பிறையை தீர்மானிக்கும் மாநாடு

கொழும்பு,மே 23

புனித ஷவ்வால் மாத தலைப்பிறையைத் தீர்மானிக்கும் மாநாடு இன்று சனிக்கிழமை மாலை மஹ்ரிப் தொழுகையைத் தொடர்ந்து கொழும்பு பெரிய பள்ளிவாசலில் நடைபெறும்.

மாநாட்டில் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா, கொழும்பு பெரிய பள்ளிவாசல் நிர்வாகிகள், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள உறுப்பினர்கள், கொழும்பு மேமன் சங்க உறுப்பினர்கள் மற்றும் உலமாக்கள் கலந்து கொள்வர்.

நாட்டில் எப்பாகத்திலாவது தலைப்பிறை தென்பட்டால் தகுந்த ஆதாரங்களுடன் 0112 432110, 0112451245 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கொழும்புபெரிய பள்ளிவாசல் சகல முஸ்லிம்களையும் கேட்டுள்ளது. (க)

# சிறுபோகச் செய்கையை அதிகரிக்க அனுமதி மறுப்பு

## மன்னாரில் விவசாயிகள் தர்க்கம்

**மன்னார், மே 23**

**தண்ணீர் வரத்து அதிகரித்தும் சிறுபோகச் செய்கைக்குரிய ஏக்கர் அளவை மாவட்டச் செயலர் அதிகரிக்கவில்லை என்பதால் விவசாயிகள் குழப்பமடைந்தனர். பொறியியலாளருடன் தர்க்கப்பட்ட விவசாயிகள் கூட்டத்திலிருந்து வெளிநடப்புச் செய்யவிருந்த நிலையில், மீண்டும் மாவட்டச் செயலரிடம் கோரிக்கை விடுப்பது என்று தீர்மானமெடுத்து விளக்கத்துடன் கடிதம் அனுப்புவதென்று முடிவெடுக்கப்பட்டதால் குழப்பம் முடிவுக்கு வந்தது.**

மன்னார் கட்டுக்கரைக்குளத்தின் கீழான சிறுபோகச் செய்கை தொடர்பான அவசர கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மன்னார் உயிலங்குளம் விவசாயிகள் ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

கட்டுக்கரைக்குளத்தின் தண்ணீரின் அளவு அதிகரித்திருப்பதைச் சுட்டிக்காட்டி 1850 ஏக்கர் சிறுபோக நெற்செய்கையை மேற்கொள்ள மன்னார் மாவட்டச் செயலர் அனுமதி வழங்க மறுத்தால் சிறுபோகம் செய்யப்போவதில்லை என்று விவசாயிகள் சுட்டிக்காட்டி கட்டுக்கரைக் குளத்தின் திட்ட முகாமைத்துவ முகாமையார் ஊடாக மாவட்டச் செயலருக்கு கோரிக்கைக் கடிதம் அனுப்பியிருந்தனர்.

மாவட்ட செயலகத்தில் செயலர் அன்ரனி மோகன்றாஸ் தலைமையில் கடந்த 11ஆம் திகதி நடைபெற்ற சிறுபோக நெற்செய்கைக் கூட்டத்தில், கட்டுக்கரைக் குளத்து நீரின் அளவு 13ஆயிரத்து 900ஏக்கர் கனஅடி என்பதால் ஆயிரத்து 250 ஏக்கரில் தான் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளலாம் என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது. தமது கோரிக்கை நிராகரிக்கப்பட்டதால் விவசாயிகள் சிறுபோக நெற்செய்கையை மேற்கொள்ளவில்லை.

தற்போது கட்டுக்கரைக்குளத்தின் தண்ணீர் மட்டம் அதிகரித்து 23 ஆயிரம் ஏக்கர் கனஅடி அளவுக்கு உயர்ந்துள்ளது. எனவே கட்டுக்கரைக்குள நீர்ப்பாசனப் பொறியியலாளரின் சிபார்சுக்கமைய ஆயிரத்து 850ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்ள முடியும் என்று மாவட்டச் செயலருக்கு விவசாயிகள் தெரிவித்து அனுமதி தருமாறு கோரியிருந்தனர். எனினும், அதற்கு அனுமதி கிடைக்கவில்லை.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் கட்டுக்கரைக்குளத் திட்ட முகாமைத்துவ முகாமையாளரிடம் இது பற்றி வேண்டுகோள் விடுத்தபோது தன்னால் ஏதும் செய்ய முடியாது என்று அவர் கூறியுள்ளார். அதனால் அவருடன் விவசாய அமைப்பின் பிரதிநிதிகள் வாக்குவாதப்பட்டனர். கருத்து முரண்பட்டனர். கூட்டத்திலிருந்து மொத்த விவசாய பிரதிநிதிகளும் வெளிநடப்புச் செய்ய முற்பட்ட நிலையில் குறித்த அமைப்பின் தலைவர் தலையிட்டு கூட்டத்தில் குறித்த அமைப்பின் கோரிக்கை அடங்கிய அறிக்கையை மாவட்டச் செயலருக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தார்.

கட்டுக்கரைத் திட்டமுகாமைத்துவ முகாமையாளர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் முருங்கன் நீர்ப்பாசனப் பொறியியலாளர், உதவி விவசாயப் பணிப்பாளர், கட்டுக்கரை திட்ட முகாமைத்துவத் தலைவர், கமநல அபிவிருத்தி அலுவலர்கள், நீர்பாசனத் திணைக்கள அலுவலர்கள், விவசாயப் போதனாசிரியர்கள், பிரதேச செயலர் பிரிவு அபிவிருத்தி அலுவலர்கள், வாய்க்கால் அமைப்புத் தலைவர்கள், கமக்கார அமைப்புத் தலைவர்கள் என சுமார்150க்கும்மேற்பட்டவர்கள் கலந்துகொண்டிருந்தனர். (த-56,213)



## 10 லட்சம் பெறுமதியான பொருள்கள் அன்பளிப்பு

மன்னார், மே 23

மன்னார் மாவட்டத்திலுள்ள முதியோர் மற்றும் சிறுவர் பராமரிப்பு நிலையங்களுக்கு சுமார் 10 இலட்சம் ரூபா பெறுமதியான சுகாதார மற்றும் இதர பொருள்கள் நேற்று வழங்கப்பட்டன.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் இவற்றை வழங்கியது.

நிறுவனத் தலைவர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் முதியோர் மற்றும் சிறுவர் இல்லங்களுக்குச் சென்று அவற்றின் நிர்வாகத்தினரிடம் அவற்றை வழங்கினர். இதன்போது மன்னார் பிரதேச செயலர் எம்.பிரதீப் மற்றும் மன்னார் பிரதேச செயலக அலுவலர்களும் கலந்துகொண்டிருந்தனர். (த-56)

## பணிமனை முன்பாக நேற்று துப்புரவுப்பணி

கிளிநொச்சி, மே 23

கிளிநொச்சி சுகாதார சேவைகள் பணிமனை முன்பாக ஏ-9 வீதியின் இருமருங்கிலும் நேற்று துப்புரவு இடம்பெற்றது. அந்தப் பகுதிகளில் காணப்பட்ட உக்கும், உக்காத கழிவுப்பொருள்கள் அகற்றப்பட்டன.

சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை அலுவலர்கள், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை அலுவலர்கள், சுகாதார பரிசோதகர்கள் உள்ளிட்டோர் இதில் கலந்துகொண்டிருந்தனர். (த-6,113)

## பச்சிலைப்பள்ளியில் டெங்கு ஒழிப்பு

கிளிநொச்சி, மே 23

யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் டெங்குக் கட்டுப்பாட்டு வேலைகள் நடைபெறுகின்றன என்று பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தவிசாளர் சு.சுரேன் தெரிவித்துள்ளார்.

பச்சிலைப்பள்ளிக்கும் டெங்கு வரவாய்ப்புக்கள் இருக்கலாம் என்று கருதியே இது நடைபெறுகின்றது என்று தெரிவிக்கப்பட்டது.

இதற்கு பிரதேச சபை நிதி ஒதுக்கீடுகள் பெறப்பட்டுள்ளன. சுகாதாரப் பரிசோதகர்கள் அடையாளம் கண்ட இடங்களைத் தெரியப்படுத்துவார்கள். அதனைச் சீர்செய்வதற்கான வேலைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பச்சிலைப்பள்ளி பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட மக்கள் தத்தமது காணிகளில் கழிவுப் பொருள்களை சரியான முறையில் அகற்ற வேண்டும் என்றும் நுளம்பு பெருகும் வகையில் இடங்களை வைத்திருக்கக் கூடாது என்றும் தவிசாளர் தெரிவித்தார். (த-6)



### நாய் குறுக்கே ஓடியதால்

## மின்கம்பத்துடன் மோதி முச்சக்கரவண்டி விபத்து

### இருவர் படுகாயம்

கொடிகாமம், மே 23

நாய் குறுக்கே ஓடியதால் முச்சக்கரவண்டி விபத்துக்குள்ளாகி, அதில் பயணித்த இருவர் படுகாயமடைந்தனர். அவர்கள் பளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை பெரியபளை பகுதியில் முற்பகல் 10.30 அளவில் இடம்பெற்றது. புதுக்குடியிருப்பிலிருந்து யாழ்ப்பாணம் செல்வதற்காக பளைப்பகுதியில் முச்சக்கரவண்டி வந்துகொண்டிருந்தபோது நாய் ஒன்று குறுக்கே ஓடியது. நாயுடன் மோதுவதைத் தவிர்ப்பதற்காக திருப்பியபோது வீதியோரம் நின்ற மின்கம்பத்துடன் மோதி இருவரும் படுகாயமடைந்தனர். முச்சக்கரவண்டி கடுமையாகச் சேதமடைந்துள்ளது. மின்கம்பம் உடைந்து வீழ்ந்துள்ளது. பளை பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (த-159)

## நெடுந்தீவு, அனலைதீவுக்கான படகுப் போக்குவரத்து பாதிப்பு

யாழ்ப்பாணம், மே 23

தற்போது நிலவும் கடும் காற்றுக் காரணமாக நெடுந்தீவு மற்றும் அனலைதீவுக்கான படகுப் போக்குவரத்து முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்.

இரு நாள்களாக கடும் காற்று வீசுகின்றது. இதனால் இன்று (நேற்று ) தீவுகளுக்கான படகுச் சேவையை நடத்தமுடியாதளவுக்கு காற்று வீசுகின்றது. படகுச் சேவை தடைப்பட்டுள்ளது. இதே நேரம் ஒரேநாளில் 12 வீடுகள் சேதமடைந்துள்ளன. அதேபோன்று அதிகளவான வாழை, பப்பாசி என்பனவும் அழிவடைந்துள்ளன. அவை பற்றிய தரவுகள் திரட்டப்படுகின்றன என்று மேலும் தெரிவித்தார். (த-105)

## இறங்குதுறைச் சீரமைப்பு முடங்கியதால் பாதிப்பு

சாவகச்சேரி, மே 23

சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு கடலேரியில் அமைக்கப்பட்ட இறங்குதுறை வேலைகள் பூர்த்தியடையாததால், தற்போது ஏற்பட்ட கடற்பெருக்கு காரணமாக அது சேதமடைவது மேலும் அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

புனித லிகோரியார் தேவாலயத்தை அண்டிய கடலேரியில் நீண்ட காலமாக கடற்றொழில் படகுகள் தொழிலில் ஈடுபட்டு வருகின்றன. இந்தப் பகுதியில் நிரந்தர இறங்குதுறை இன்மையால் கடற்பெருக்குஏற்படும் காலங்களில் படகுகளில் வருவோர் சிரமங்களை எதிர்நோக்கினர்.

அந்தப்பகுதி கடற்றொழிலாளர் சங்கத்தினர் விடுத்த வேண்டுகோளையடுத்து இறங்குதுறை அமைப்பதற்கு கடந்த வருடம் கிராமத்துக்கு ஒரு மில்லியன் வேலைத்திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டு கற்கள் பறிக்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இறங்குதுறைக்கான கற்கள் அடுக்கப்பட்டு மணல் பறிக்கப்பட்ட நிலையில் நாட்டு நிலைமை காரணமாக வேலைகள் இடைநிறுத்தப்பட்டன.

தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக கடலேரியில் வெள்ளம் அதிகரித்துள்ளது. இதனால் அடுக்கப்பட்டிருந்த கற்கள் சிதைவடைந்து பறிக்கப்பட்டிருந்த மணலும் கடலுக்குள் செல்கின்றது - என்று தெரிவிக்கப்பட்டது. (த-9)

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## நஷ்டத்தில் தோள் கொடுங்கள்

பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக மாறிப்போயுள்ளது வடக்கு விவசாயிகளின் நிலைமை. முன்னரென்றால் வெளியிடங்களுக்கு விவாசாய உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதன் மூலம் சந்தை வாய்ப்பையும், இலாபகரமான வருமானத்தையும் பெற முடிந்தது. சில சந்தர்ப்பங்களில் யாழ்ப்பாணத்தில்,சீசன் காலத்தில் குறிப்பிட்ட சில விவசாய உற்பத்திகள் மிகையாக உற்பத்தி செய்யப்பட்டு, உற்பத்திச் செலவை விடவும் மலிவாகக் கொடுக்கவேண்டிய நிலை உருவாகும். அந்தச் சந்தர்ப்பங்களில் தம்புள்ள பொருளாதார மையத்துக்கு அவற்றை அனுப்பி வைப்பதன் ஊடாக நியாயமான வருமானத்தைப் பெற முடிந்தது. பெரியளவில் இலாபத்தைச் சம்பாதிக்க முடியாவிட்டாலும்,நஷ்டத்தைத் தவிர்க்கக் கூடியதாக இருந்தது.

ஆனால் கொரோனாக் கால ஊரடங்கு வாழ்வு விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களை அடிமாட்டு விலைக்கே விற்பனை செய்யக்கூடிய நிலைக்கு இட்டுச் சென்றது. மாவட்டம் விட்டு மாவட்டம் செல்லத் தடை விதிக்கப்பட்டதால், குண்டுச் சட்டிக்குள்ளேயே குதிரை ஓட வேண்டியநிலை. உற்பத்தி செய்யப்படும் எல்லாப் பொருள்களையும் இங்கேதான் விற்பனை செய்ய வேண்டும். ஆனால் விற்பனை மையங்களான சந்தை, கடைகள் என்பன ஊரடங்கால் இழுத்து மூடப்பட்டதால், அவற்றை நடமாடும் வாகனங்கள் மூலமே, அதுவும் அனுமதி பெற்றவர்களுக்கு மட்டுமே கொடுக்கமுடியும். இப்படியான நிலையில் அவர்கள் சொல்லும் விலைக்கே மறுவார்த்தை பேசாமல் விவாசாய உற்பத்திகளைக் கொடுக்கவேண்டியதாயிற்று, இதனால் போட்ட பணத்தைக் கூட எடுக்க முடியாமல் விவசாயிகள் தத்தளித்தார்கள். இனிக் கொரோனாவை விரட்டுவதை விடுத்து, வைரஸோடு வாழப்பழகிக்கொண்டு இயல்பு வாழ்வுக்கு திரும்ப அரசு நடவடிக்கை எடுத்தது. இதனால் இத்தனை நாளும் ஏற்பட்ட நட்டங்களை இனிவரும் காலத்தில் ஈடுசெய்யலாம் என நினைத்த விவசாயிகளின் வயிற்றில் இயற்கையும் தன் பங்குக்கு அடித்துவிட்டுச் சென்றிருக்கிறது.

'அம்பான்' என்ற பெயரோடு வந்த சூறைக்காற்று நேரடியாக இலங்கையைத் தாக்கவிட்டாலும் அதன் எச்சசொச்சங்களாக வீசும் கடும் காற்று பெருமளவான விவாசாயப் பயிர்களை ஒரு கை பார்த்துக் கொண்டிருக்கின்றது. வாழை, பப்பாசி, முருங்கை போன்ற அதியுச்சப் பயனையும் இலாபத்தையும் தருகின்ற பயிர்களையும், அவற்றின் விளைபொருள்களையும் வீழ்த்தியிருக்கிறது கடும் காற்று. அதைவிட யாழ்ப்பாணத்தில் இப்போது மாம்பழ சீசன். கொத்தும் குலையுமாக மரங்களில் தொங்கிக் கொண்டிருந்த முற்றிய மாங்காய்களை தென்னிலங்கைக்கு அனுப்பி , கொஞ்சம் வருமானம் பார்க்கலாம் என்ற எண்ணத்திலும் மண்ணள்ளிப் போட்டு, மாங்காய்களை எல்லாம் சகட்டுமேனிக்கு பிடுங்கியெறிந்திருக்கிறது பேய்க்காற்று. ஆக, கொரோனாவல் நொந்து நூலாகியிருந்த விவசாயிகளுக்கு , இந்தக் கடும் காற்று இன்னொரு அடியைக் கொடுத்திருக்கிறது.

ஆனாலும் இப்படி தொடர்ச்சியாக அடிமேல் அடி விழுந்தாலும், விவசாயிகள் துவண்டு விடுவதில்லை. இந்த அடிகளில் இருந்து மீள்வதற்கான காலம் வருமென்ற நம்பிக்கையோடு மீண்டும் வயலுக்குள் நாளையே இறங்கத்தான் போகிறார்கள். அந்தப் போகமும் ஏதோ ஒரு காரணத்தால் பொய்த்துப் போனாலும், அதைப் பற்றி அவர்கள் கலங்குவதில்லை. மாறாக, அதே நம்பிக்கையோடு மீண்டுமொரு முறை , கஜினி போல சளைக்காமல் வேளாண்மையில் இறங்கி விடுவார்கள். ஆனாலும்,இப்படியே அவர்களை நஷ்டத்தின் நாயகர்களாக விட்டுவிட்டு அரசு வேடிக்கை பார்க்க முடியாது. கொரோனா ஏற்படுத்திய பொருளாதாரத் தாக்கங்களால் பட்டினி நிலை உருவாகும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது. அப்படி நிகழாமல் இருக்க வேண்டுமாயின் விவசாயத்துறையை இப்போதுள்ளதைவிட பல மடங்கு பலமானதாக்க வேண்டும். எனவே தொடர் நஷ்டங்களில் சிக்குண்டுள்ள விவசாயிகளுக்கான மானியம், நஷ்டஈடு என்பவற்றை வழங்குவதோடு , விவசாய நடவடிக்கைகளுக்கு பக்கபலமாகவும் இருக்க வேண்டும். அரசுதான் இப்போது 'சௌபாக்கியா' திட்டம் மூலம் மானிய விதை கொடுக்கிறதே என்று சிலர் கேட்கலாம். ஆனால் அப்படி மானியமாகக் கொடுக்கப்படும் விதைகளும், உர வகைகளும் தரமானதாக இல்லை என்ற குற்றச்சாட்டு நீண்டகாலமாகவே இருக்கிறது. இம்முறையும் அப்படியான் குற்றச்சாட்டு முல்லைத்தீவில் கிளம்பியிருக்கிறது. ஆகவே மானியம் என்ற பெயரில் கொடுப்பதெல்லாம் தரமற்றவையே என்ற முற்கற்பிதத்தை மாற்றி, தரமான உள்ளீடுகளை வழங்கி, விவசாயிகளின் நஷ்டங்களிலும் அரசு தோள் கொடுக்குமானால், கொரோனாவுக்குப் பின்னான காலத்தில் பட்டினி எழும் என்ற பயத்தை இல்லாதாக்கலாம்.

# யாழில் கடும் காற்று 655 பேருக்கு பாதிப்பு

யாழ்ப்பாணம், மே 23

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடும் காற்றின் காரணமாக 196 குடும்பங்களைச் சேர்ந்த 655 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாண மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் மாவட்ட உதவிப் பணிப்பாளர் என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

வங்கக் கடலில் உருவான "அம்பான்" புயலின் விளைவுகள் இலங்கையிலும் உணரப்படுகின்றது. கடந்த சில நாள்களாக நாட்டின் பல இடங்களில் பலத்த மழை வீழ்ச்சி பதிவாகியதுடன், கடும் காற்றும் வீசி வருகின்றது. யாழ்ப்பாணத்தில் தற்போது வீசி வரும் கடும் காற்றுக் காரணமாக 196 குடும்பங்களைச் சேர்ந்த 655 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 71 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. ஒரு வீடு முழுமையாகச் சேதமடைந்துள்ளது. கைதடியில் பாடசாலை ஒன்றும் சேதமடைந்துள்ளது. மயிலிட்டியில் மரம் முறிந்து விழுந்து ஒரு பெண் காயமடைந்துள்ளார். இவர் தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். நெடுந்தீவுப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடலில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர் ஒருவர் காணாமல் போயுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டபோதும் அவர்பின்னர்கரை திரும்பியு ள்ளார். காற்றுடன் கூடிய காலநிலை எதிர்வரும் 24 மணித்தியாலத்துக்கு நீடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதனால் பொதுமக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும். நிலப் பகுதியை விடக் கடற்கரைக்கு அண்மையான பகுதிகளில் காற்றின் வேகம் பலமானதாக இருக்கும். கரையோர மக்கள் கவனமாக இருக்க வேண்டும். மீனவர்கள் கடலுக்குச் செல்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று அவர் தெரிவித்தார். (எ)

## வடக்குக்கு வெளியே இ.போ.ச. பஸ் சேவையில்லை

*நிலையப் பொறுப்பதிகாரி தெரிவிப்பு*

யாழ்ப்பாணம்,மே 23

இலங்கை போக்குவரத்து சபையால் வடக்கு மாகாணத்துக்கு வெளியில் எந்த ஒரு சேவையும் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை என்று யாழ். பஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.தனராஜ் தெரிவித்தார் இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாட்டில் ஏற்பட்ட கொரோனாத் தாக்கத்தின் காரணமாக ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டு, தற்போது தளர்த்தப்பட்டுள்ளது. இலங்கைப் போக்குவரத்து சபை பஸ் சேவைகள் அத்தியாவசிய தேவைகளுக்காக மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இடம்பெற்று வருகின்றன.

வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட ஏழு சாலைகளுக்கிடையிலான போக்குவரத்துச் சேவைகள் இடம்பெற்று வருகின்றன.

குறுகிய காலத்துக்கு முன்னர் இரண்டு ஆசனத்தில் ஒருவரும் 3 ஆசனத்தில் இரண்டு பேரும் என்ற அடிப்படையில் போக்குவரத்துச் சேவை இடம்பெற்று வந்தது. தற்போதைய நிலைமையில் ஆசன மட்டத்தில் பயணிகள் ஏற்றக்கூடியவாறு சுகாதார நடைமுறைகளை சுகாதாரத் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

சுகாதார நடைமுறைகளை பின்பற்றியே இலங்கை போக்குவரத்து சபை பேருந்து சேவை இடம்பெற்று வருகிறது.

எனினும் வடக்கு மாகாணத்துக்கு வெளியிலான சேவைகள் எவையும் இலங்கைப் போக்குவரத்துச் சபையால் நடத்தப்படவில்லை. எமது சாலைக்கு தொலைபேசி மூலமும், நேரடியாகவும் வருகை தந்து வடமாகாணத்துக்கு வெளியில் பஸ் சேவை இடம்பெறுகிறதா என மக்கள் வினவுகின்றனர். இலங்கை போக்குவரத்து சபையானது இன்றுவரை வடக்குமாகாணத்துக்கு வெளியில் எந்த ஒரு பஸ் சேவையையும் ஆரம்பிக்கவில்லை என்பதனை மக்களுக்கு தெளிவாக தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம்.

அத்தோடு எமது பஸ்களில் பயணிக்கும் பயணிகள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி, அதாவது முகக்கவசங்ங்ள் அணிந்து பயணம் செய்வது மிகவும் பாதுகாப்பானதாக இருக்கும்- என்றார். (க-111)

## போதனாவில் பி.சி.ஆர். சோதனை: எவருக்கும் தொற்றில்லை

யாழ்ப்பாணம், மே 23

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வுகூடத்தில் நேற்று 44 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்த நில்லயில், அவர்களில் எவருக்கும் கொரோனாத் தொற்று இனங்காணப்படவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை விடுதிகளில் சேர்க்கப்பட்ட 3 பேருக்கும், போதனா மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவில் பரிசோதிக்கப்பட்ட 6 பேருக்கும், முல்லைத்தீவு ஆதார மருத்துவமனை ஊடாக, படைத்தரப்பைச் சேர்ந்த ஒருவருக்கும், இரணைமடு தனிமைப்படுத்தல் மையத்தைச் சேர்ந்த ஒருவருக்கும், யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்குட்டபட்ட 14 பேருக்கும், பம்மைபடு தனிமைப்படுத்தல் மையத்தைச் சேர்ந்த 12 பேருக்கும், மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட 7 பேருக்குமே பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

அவர்களில் எவருக்கும் கொரோனா தொற்றுக் கண்டறியப்படவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)


## பம்பைமடு முகாமுக்கு 17 பஸ்களில் சிப்பாய்கள்

கொழும்பு, மே 23

வவுனியா பம்பைமடு தனிமைப்படுத்தல் முகாமுக்கு வெலிசறைக் கடற்படை முகாமைச் சேர்ந்த கடற்படையினர் 17 பஸ்களில் நேற்றிரவு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

வெலிசறைக் கடற்படை முகாமில் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ள நிலையில் அங்குள்ள 500க்கும் மேற்பட்ட கடற்படைச் சிப்பாய்களுக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அந்த முகாமைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானவர்கள் பல்வேறு தனிமைப்படுத்தல் முகாம்களில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

நேற்றிரவு 7 மணியளவில் 17 பஸ்களில் கடற்படையினர் பம்மைமடு தனிமைப்படுத்தல் முகாமுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். (எ-18)



## ஏழைக் குடும்பத்துக்கு மலகூடம் கட்டிக்கொடுப்பு

யாழ்ப்பாணம், மே 23

புன்னாலைக்கட்டுவனில் நிரந்தர வீடு, மல சலகூட வசதி இல்லாது காணப்பட்ட சிறிய பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்துக்கு மலசலகூடம் அண்மையில் அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது.

கனடா வாழ் அன்பரின் நிதி உதவியில் கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையத்தினதும் குமரன் விளையாட்டுக்கழகத்தினதும் 'உயர்த்தும் கரங்கள்' செயற்றிட்டத்தினூடாக இது அமைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப் பட்டது. (த-222)

# சட்டத்தரணியின் பொருள்களை வீதியில் கொட்டிய சிப்பாய்கள்

## யாழ்ப்பாணத்தில் இப்படி நிலைமை

யாழ்ப்பாணம், மே 23

**யாழ்ப்பாணத்தில் இளம் பெண் சட்டத்தரணியின் கைப்பையை இராணுவத்தினர் சோதனையிடுவதற்காக அதற்குள்ளிருந்த பொருள்களை வீதியில் கொட்டி யுள்ளனர் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. பின்னர் அந்தப் பொருள்களை அள்ளிச் செல்லுமாறு இராணுவத்தினர் கூற அவற்றை அந்த இடத்திலேயே விட்டுவந்தேன் என்று அந்தச் சட்டத்தரணி கூறியுள்ளார்.**

யாழ்ப்பாணம் நகரை அண்மித்த பகுதியில் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. அவர் தனது மூத்த சட்டத்தரணியின் அலுவலகத்தில் கடமைகளை முடித்துக்கொண்டு இரவு 7 மணியளவில் வீடு திரும்பியபோது வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டு இருந்த இராணுவத்தினர் பெண் சட்டத்தரணியை மறித்து சோதனையிட்டுள்ளனர். தான் சட்டத்தரணி என்றுகூறி தனது அடையாள அட்டையை இராணுவத்தினரிடம் காண்பித்துள்ளார். அவருடைய கைப்பையை தாம் சோதிக்க வேண்டும் என்றுகூறி அதை வாங்கி அதற்குள்ளிருந்த பொருள்களை இராணுவத்தினர் வீதியில்கொட்டி கைப்பையை சோதனையிட்டனர். பின்னர் வீதியில் கொட்டப்பட்ட பொருள்களை பொறுக்கிச் செல்லுமாறு இராணுவத்தினர் கூறியுள்ளனர். அதற்கு சம்மதிக்காத சட்டத்தரணி, பொருள்களை வீதியில் கைவிட்டு தனது கைப்பையை இராணுவத்தினரிடமிருந்து வாங்கி சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## பிரதேச சபைகளில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

பருத்தித்துறை, மே 23

பருத்தித்துறை பிரதேசசபையின் நேற்றைய மாதாந்தக் கூட்டங்க ளில் தவிசாளர் அ.சா. அரியகுமார் தலைமையில், பதினோராம் ஆண்டு முள்ளி வாய்க்கால் நினைவேந்தல் அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதேபோன்று கரவெட்டி பிரதேச சபைக் கூட்டம் தவிசாளர் த.ஐங்கரன் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. உறுப்பினர்களின் கோரிக்கைகளுக்கு இணங்க ஒரு சில நிமிடங்கள் உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று அஞ்சலி செலுத்தினர். (த-173)



## மண் அகழ்வுக்கு எதிராக கிராம மக்கள் போராட்டம்

வவுனியா செட்டிகுளம் கல்நாட்டியில் மக்கள் விவசாயம் மேற்கொள்ளும் பகுதிக்கு அண்மையில் மண் அகழ்வு தால் தமக்கு பாதிப்பு ஏற்படுகின்றது என்றுகூறிய மக்கள், மண் அகழ்வுக்கு எதிராக நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

செட்டிகுளம் பிரதேச சபைக்குட்பட்ட கன்னாட்டி பகுதியிலுள்ள ஐந்து குளங்களின் கீழ் 320 ஏக்கர் பரப்பில் வேளாண்மை மேற்கொள்ளப்படுகின்றது. குறித்த கிராமங்களில் வாழும் மக்கள் வாழ்வாதாரமாக விவாசாயத்தையே மேற்கொண்டு வருகின்றார்கள். அங்கு பல டிப்பர்களில் மண் அகழப்பட்டு கொண்டுசெல்லப்படுகின்றது. பர்ராஜகுளம், கொல்லங்குளம், துத்திக்குளம், மரக்காரம் பளை குளம், ஊறங்குளம் ஆகிய ஐந்து குளங்களுக்கான தண்ணீர் கன்னாட்டி பகுதியிலிருந்தே செல்கிறது. மண் அகழ்வால் இந்தப் பகுதிகளில் தண்ணீர் தேங்கிநிற்கும் நிலை ஏற்படுகின்றது. அதனால் இந்தப் பகுதியில் மண் அகழ்வை உடனடியாக நிறுத்த வேண்டுமென்று கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

சம்பவ இடத்துக்குச்சென்ற செட்டிகுளம் பிரதேச சபை உறுப்பினர் அலெக்ஸ் யூட், மண் அகழ்வில் ஈடுபடும் நபர்களிடம் அனுமதிப் பத்திரங்களை காண்பிக்குமாறு கோரினார். அவர்களிடம் பிரதேச சபையின் அனுமதி இருந்திருக்கவில்லை. உடனடியாக மண்அகழ்வைநிறுத்துமாறும், உரிய முறையில் அனுமதி பெறுமாறும்கூறி மண் அகழ்வை தடுத்துநிறுத்தினார். அதனையடுத்து அந்தப்பகுதியிலிருந்து மக்கள் கலந்து சென்றனர். (த-110)


## பொலிஸ் விடுதி மீது மரம் முறிந்து வீழ்ந்தது

### அலுவலர் காயம்

கிளிநொச்சி, மே 23

கிளிநொச்சி இராமநாதபுரம் பொலிஸ் நிலையத்தின் விடுதி மீது நேற்றுமுன்தினம் மாலை மரம் முறிந்து வீழ்ந்ததில் பொலிஸ் அதிகாரி ஒருவர் காயமடைந்துள்ளார். இரண்டு பொலிஸார் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி இராமநாதபுரத்தில் பணிபுரியும் பிரஜீவன் என்ற பொலிஸ் அலுவலரே காயமடைந்து கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (த-6,214)



## புலோலி – கொடிகாமம் வீதி திருத்தம் மீள ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 23

புலோலி – கொடிகாமம் பிரதான வீதி அகலிக்கப்பட்டு காப்பெற் வீதியாக அமைக்கும் அபிவிருத்திப் பணிகள் இரண்டு மாத இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன.

மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான தென்பத்தி மற்றும் உள்நாட்டு தொழிலாளர்கள் சுகாதாரப் பிரிவின் சான்றிதழ் பெற்று இந்தப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பெரும் எண்ணிக்கையிலான தொழிலாளர்களின் பங்களிப்புடன் நடைபெற்றுவந்த இந்த வீதி அபிவிருத்திப் பணிகள் கொரோனா தொற்றுநோய் பரவலையடுத்து இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது.

தற்போது கொரோனாத் தொற்று ஓரளவுக்கு கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது. இந்தநிலையில், வீதி அபிவிருத்திப்பணியில்ஈடுபட்டுள்ள 'மஹா' நிறுவனம் தொடர்ந்து பணியை முன்னெடுக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

அடுத்த வாரத்திலிருந்து இந்தப் பணியை முன்னெடுக்க கடந்த காலங்களைப்போல் அதிக தொழிலாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-173)

## குருதிக்கொடை முகாம்

சமூக ஆர்வலர்களின் ஏற்பாட்டில் இன்று சனிக்கிழமை கச்சாய் வீதி சாவகச்சேரியில் அமைந்துள்ள ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தில் முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை குருதிக்கொடை முகாம் நடைபெறவுள்ளது.

குருதிக்கொடையாளர்கள் அனைவரையும் கலந்துகொண்டு குருதிதானம் செய்யுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஐ-159)

### மாவீரர்தின ஏற்பாடுகள்

## முல்லையில் இருவர் ரி.ஐ.டி விசாரணையில்

முல்லைத்தீவு, மே 23

முல்லைத்தீவு தேராவில் மாவீரர் துயிலும் இல்லத்தில் கடந்த டிசெம்பரில் மாவீரர் நாள் நிகழ்வுகளை ஏற்பாடு செய்த மாவீரர் துயிலுமில்ல பணிக் குழுத் தலைவர் தம்பையா யோகேஸ்வரன், பணிக்குழு செயலாளர் சுந்தரலிங்கம் யோகலிங்கம் ஆகியோரிடம் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் விசாரணை நடத்தியுள்ளனர்.

நேற்று முற்பகல் 11.30 மணியளவில் பணிக் குழுத் தலைவருடைய இல்லத்துக்கு வந்த பயங்கரவாத விசாரணைப் பிரிவினர், இருவரிடமும் சுமார் நான்கு மணித்தியாலங்கள் விசாரணை நடத்தினர்.

மாவீரர் நாள் நிகழ்வுகளை ஒழுங்கு செய்தமை தொடர்பில் மன்னாரில் இருவர் கடந்த புதன்கிழமை விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். (த)

# கடும் காற்றால் கிளிநொச்சியில் 12 மணி நேரம் மின்சாரம் துண்டிப்பு

**கிளிநொச்சி, மே 23**

**கிளிநொச்சி இரத்தினபுரம் பகுதியில் வீசிய பலத்த காற்றினால் பாலை மரம் ஒன்று முறிந்து வீழ்ந்ததில் போக்குவரத்து பாதிக்கப்பட்டதுடன் பல கிராமங்களுக்கான மின்சாரமும் துண்டிக்கப்பட்டது. மீண்டும் நேற்று அதிகாலை 2 மணியளவிலேயே மின்சாரம் கிடைக்கப் பெற்றுள்ளது.**

நேற்று முன்தினம் பகல் 1.30 மணியளவில் வீசிய பலத்த காற்றினாலேயே மரம் முறிந்து வீழ்ந்துள்ளது. இதனால் மின்சார சபை மற்றும் ரெலிகொம் நிறுவனம் ஆகியவற்றுக்கு பெரும் நட்டம் ஏற்பட்டுள்ளது. மரம் முறிந்து வீழ்ந்ததில் மின் கம்பிகள் அறுந்துள்ளது. அத்துடன் கம்பங்களும் முறிந்துள்ளன. இதன் காரணமாக வட்டக்கச்சி, இராமநாதபுரம், திருவையாறு, பன்னங்கண்டி உள்ளிட்ட பல கிராமங்களுக்கான மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. மேலும் கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்றுமுன்தினம்



காலை முதல்வீசிய பலத்த காற்றுக் காரணமாக பூநகரி குடமுருட்டிப் பகுதியில் உள்ள மின்கம்பங்கள் முறிந்து வீழ்ந்ததன் காரணமாக பூநகரிப் பிரதேசத்தில் உள்ள பல கிராமங்களுக்கு மின்சாரம் தடைப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ-35,214)

## கலந்துரையாடல்

முல்லைத்தீவு, மே 23
முல்லைத்தீவு வன்னிவிளாங்குளம் அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவம் தொடர்பான கலந்துரையாடல் ஆலய மண்டபத்தில் அண்மையில் மாவட்ட செயலர் தலைமையில் நடைபெற்றது.
மாங்குளம் வன்னிவிளாங்குள அம்மன் ஆலயப் பொங்கல் உற்சவம் எதிர்வரும் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.
தொற்றுக் காரணமாக பொதுமக்களை மட்டுப்படுத்துவது தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.
ஆலயத்தில் சடங்குகள் செய்வதற்கு 50 பேர் சுகாதார நடைமுறைக்கு அமைவாக அனுமதிக்கப்பட்டதோடு, நேர்த்திக் கடன் செய்வது முழுமையாகத் தடைசெய்யப்பட்டுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டது.
இக் கலந்துரையாடலில் ஆலயத் தலைவர் பொ. பிருந்தாபன், மாந்தை கிழக்கு சுகாதாரப் பணிப்பாளர் க.சுசீந்திரா, பொலிஸ் பொறுப்பதிகாரி, இராணுவப் பொறுப்பதிகாரி, மாவட்ட கலாசார உத்தியோகத்தர், மாந்தை கிழக்கு பிரதேச செயலர், உதவி மாவட்ட செயலர் ஆலய நிர்வாக உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஐ)

## 2 ஆம் கட்ட கொடுப்பனவு 50 வீதம் நிறைவு

முல்லைத்தீவு, மே 23
முல்லைத்தீவு மாவட்டத்தில் 2 ஆம் கட்டக் கொடுப்பனவு 50 வீதத்துக்கு மேற்பட்டோருக்கு வழங்கப்பட்டுள்ளதாக சமுர்த்தித் திணைக்களத்தின் மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.
2 ஆம் கட்டக் கொடுப்பனவுகள் வழங்கல் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நேற்று வரை 50 வீதத்துக்கு மேற்பட்டோருக்கு கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.
(ஐ-39)

## சபைக்கு எதிரான வழக்கு கைவாங்கல்

தலைமன்னார், மே 23
மன்னார் நகரசபைத் தவிசாளர் மற்றும் செயலாளருக்கு எதிராக மன்னார் தனியார் வாடகை வாகன சங்கத்தினர் தாக்கல்செய்த வழக்கு இரு சாராருக்கும் இடையே ஏற்பட்டுள்ள சமரச பேச்சையடுத்து சில நிபந்தனைகளுடன் மீளப்பெறப்பட்டது.
மன்னார் நகர சபைத் தலைவர் தனது குழுவினருடன் சென்று, ஊரடங்கு நடைமுறையிலிருக்கும்போது சட்டத்துக்கு முரணாக சங்கத்தின் கட்டடத்தை தரைமட்டமாக்கினார் என்றும் சொத்துகளுக்கும் சேதம் ஏற்படுத்தியிருந்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது.
மன்னார் பொலிஸார் நடவடிக்கை எடுக்காததால் மன்னார் மாவட்ட தனியார் வாடகை போக்குவரத்து சங்க சட்டத்தரணிகள் ஊடாக மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்றில் 11ஆம் திகதி தடை உத்தரவு பெற்றிருந்தனர்.
வழக்கு நேற்று வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது.
வழக்கின் எதிராளிகளான மன்னார் நகர சபைத் தவிசாளர் மற்றும் நகரசபை செயலாளர் இருவரும், வழக்காளிகள் சார்பாக சங்கத் தலைவரும் மன்றில் முற்பட்டனர்.
வழக்கை சமரசமாக முடித்துக்கொள்ளும் பொருட்டு வழக்காளிகளுக்கும் நகர சபையினருக்குமிடையே நடைபெற்ற கலந்துரையாடலின் அடிப்படையில் தனியார் வாடகை வாகன சங்கத்தினருக்கு மாற்று இடம் ஒன்று வழங்குவதாக மன்னார் நகர சபையால் தெரிவிக்கப்பட்டது. அந்த இடத்தை பார்வையிட வேண்டும் என்று வழக்காளிகள் தரப்பு கோரிக்கை முன்வைத்தது.
அதற்காக அரைமணி நேரம் வழக்கை நீதிவான் ஒத்திவைத்தார். மன்னார் நகர சபை தவிசாளர், செயலாளர் நகர சபை உறுப்பினர்களுடன் சங்கத்தின் தலைவர் மற்றும் சங்க உறுப்பினர்களும் வழக்குடன் தொடர்புடைய சட்டத்தரணிகளும் குறித்த இடத்தை பார்வையிட்டனர்.
வழக்கு மீண்டும் அழைக்கப்பட்டபோது அந்த இடத்திலுள்ள குறைபாடுகள் சீர்செய்யப்பட்டால் தற்பொழுது இருக்கும் இடத்தைவிட்டு புதிய இடத்துக்கு தனியார் வாடகை வாகன சங்கம் செல்லும் என்று மன்றில் தெரிவிக்கப்பட்டது. இதனடிப்படையில் வழக்கு சமரசமாக தீர்க்கப்பட்டு மீளப்பெறப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.
(த-60)


## எதேச்சாதிகார ஆட்சியையே நடத்துகின்றது கோத்தா அரசு

### *ஹரிசன் தெரிவிப்பு*

கொழும்பு, மே 23
ஆட்சியைக் கைப்பற்றிய குறுகிய காலத்துக்குள் மக்களுக்கு நெருக்கடியையேற்படுத்தியுள்ள அரசொன்றை இதுவரையில் அறிந்ததில்லை. ஜனநாயக ஆட்சியைப் புதைத்து விட்டு, எதேச்சதிகார ஆட்சியையே முன்னெடுத்து வருகிறது.
இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பி. ஹரிசன், தெரிவித்தார்.
ஐக்கிய மக்கள் சக்தியின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
எரிபொருளால் கிடைக்கப் பெறும் இலாபத்தை மக்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு அரசு முயற்சிக்கவில்லை.
அரிசியை சலுகையான முறையில் விநியோகிக்கவும் நடவடிக்கை எடுக்கவில்லை. இன்று பல அரிசி ஆலைகளில் நெல் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் அவதானம் செலுத்தி மக்களுக்குச் சலுகையான முறையில் அரசி பெற்றுக்கொடுக்கப்படவேண்டும்.
அரசு கொரோனா நெருக்கடியின் மத்தியில், பிணங்கள் மேல் ஏறியாவது பொதுத் தேர்தலை நடத்தும் நோக்கிலே செயற்பட்டு வருகின்றது. தேர்தலை நடத்துவது தொடர்பில் நீதிமன்ற விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. நீதித்துறை சுயாதீனமான முடிவை எடுக்கும் என்றே நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.
பொதுத் தேர்தலை நடத்துவதற்கான சூழ்நிலை தற்போதில்லை என்று நாங்கள் அறிவுறுத்தி வந்த நிலையில், தேர்தல்கள் ஆணையாளரும் இன்னமும் 10 வாரங்களாவது பொறுத்திருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.
இதேவேளை 5 ஆயிரம் ரூபா நிவாரணத்தின் ஊடாக அரசு அரசியல் நோக்



கம் கருதிச் செயற்பட்டு வருவதாக நாங்கள் எடுத்துரைத்த போதும். கவனத்தில் கொள்ளாது இருந்த ஆணையாளர், தற்போது இந்தச் செயற்பாடுகளுக்கு அரசியல் வாதிகளை இணைத்துக் கொள்ளவேண்டாம் என்று தெரிவித்துள்ளார்.
தற்போது அரசாங்கம் இந்த நிவாரணத்தையும் பெற்றுக் கொடுக்காது இருக்கத் தீர்மானம் எடுத்துள்ளது.
நிவாரணம் வழங்கும் செயற்பாடுகளுக்கு அரசியல்வாதிகள் இன்றி அரச ஊழியர்களின் உதவியுடன் எந்தவித இடையூறுமின்றி நிவாரணத்தைப் பெற்றுக் கொடுக்க முடியும். நாட்டில் செலவுகள் அதிகரித்துள்ளமையால் மக்களுக்குச் சலுகைகளைப் பெற்றுக் கொடுக்க முடியாது என்று அரசு தெரிவித்துள்ளது. ஆனால் விளையாட்டு மைதானம் அமைப்பதற்கு முயற்சித்து வருகின்றது.
அரசாங்கத்திடம் விவசாயத் துறையை முன்னேற்றுவதற்காக சிறந்த வேலைத் திட்டங்கள் எதுவும் இல்லை.
இதனால் எதிர்காலத்தில் விவசாயிகள் நஞ்சருந்தி உயிரிழக்க வேண்டிய நிலைமையும் ஏற்படலாம்.
எல்லாவற்றிலும், இராணுவத்தினரை இணைத்துக் கொண்டு செயற்பட்டு வரும் அரசு, ஜனநாயகத்தைப் புதைத்து விட்டு, எதேச்சதிகாரத்தை முன்னெடுப்பதாகவே தோன்றுகின்றது.
எதிர்வரும் பொதுத் தேர்தலில் மக்கள் இவர்களுக்கு உகந்த பாடத்தைக் கற்பிப்பார்கள்- என்றார். (க)



## ஹெரோயினுடன் இருவர் கைது

கொடிகாமம், மே 23
ஹெரோயின் போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருநகர் மற்றும் யாழ்ப்பாண நகரப்பகுதிகளில் வைத்து நேற்று முன்தினம் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.
சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாண பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ஐ-159)

# ஐ.நா. தீர்மானத்தை புறம்தள்ளியே இராணுவத்தினருக்கு பதவியுயர்வுகள்

## ஆதாரங்களுடன் எடுத்தியம்புகிறார் ஜஸ்மின்



கொழும்பு, மே 23

**இலங்கையில் போர் முடிவடைந்து 11 ஆண்டு நிறைவில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ அதிகாரிகளுக்கு வேண்டுமென்றே மேஜர் ஜெனரல் பதவியுயர்வு வழங்கியுள்ளார். பாதுகாப்புத்துறைச் சீர்திருத்தத்திற்கான ஐ.நாவின் தீர்மானம் 30/1 இன் கீழ் இலங்கையின் உறுதிப்பாடுகளுக்கு இணங்க உத்தியோகபூர்வமான பதவிகள் வழங்கப்பட முன்னர் இந்த அதிகாரிகள் வடிகட்டல் மற்றும் ஆய்வுக்குட்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.**

இந்த தனிநபர்களின் தெரிவானது அரசியலை அடிப்படையாகக் கொண்டதொன்று இது இலங்கையர்களுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் பேச்சளவிலான நல்லிணக்கம் என்பது கூட நிகழ்ச்சி நிரலில் இல்லை என்ற செய்தியை மீண்டும் அனுப்புகின்றது. இது பாதிக்கப்பட்டவர்களை இழிவுபடுத்தும் இன்னுமொரு செயலாகவும் தண்டனையிலிருந்து துணிவாக பாதுகாப்பு வழங்கும் செயலாகவும் உள்ளது' என்று சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

இலங்கையின் ஒரு இராஜதந்திரியாக இருந்தவேளையில் பொதுக் கட்டளைச் சட்டத்தை மீறியதாக நீதிமன்றத்துக்கு சமூகமளிக்காதபோதும் பிரிட்டன் நீதிமன்றத்தால் குற்றவாளியாக இனங்காணப்பட்ட பிரியங்க பெர்னாண்டோவின் பதவியுயர்வானது மிகவும் முக்கியமானதாகும்.

2018 ஆம் ஆண்டு பிரிட்டனிலுள்ள இலங்கைத் தூதரகத்துக்கு வெளியே தமிழ் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கழுத்தை அறுக்கும் சைகையைக்காட்டி அச்சுறுத்தல் மேற்கொண்டதாக குற்றஞ்சாட்டப்பட்டார். இவர் குற்றச் செயல்கள் புரிந்தபோதும் இலங்கைக்கு திரும்பிச் சென்றதில் இருந்து இவருக்கு மீண்டும் மீண்டும் பதவியுயர்வுகள் வழங்கப்பட்டதுடன் ஒரு மாவீரனாகவும் அழைக்கப்பட்டார்.

'நீங்கள் உலகம் முழுவதும் சென்று நாடுகடந்து வாழும் தமிழர்களை இழிவுபடுத்தி அச்சுறுத்தினால் உங்களுக்கு பரிசு வழங்கப்படும் என்பதே இராணுவ அதிகாரிகள் மற்றும் இராஜதந்திரிகளுக்கான செய்தியாகும்' என்று சூக்கா தெரிவித்தார். இது பிரிட்டனின் நீதிமுறைமையை அவமதிக்கும் ஒரு மோசமான நடவடிக்கையுமாகும்'

விசேட அதிரடிப்படைகளின் முன்னாள் தளபதியான கரேந்திர பராக்கிரம ரணசிங்கவின் பதவியுயர்வானது பொறுப்புக்கூறலுக்கு விழுந்த இன்னுமொரு பெரிய அடியாகும். மே 2009 இல் இசைப்பிரியா என்று அறியப்பட்ட தமிழ் தொலைக்காட்சியின் பெண் தயாரிப்பாளர் இராணுவத்தினரிடம் சரணடைவது பற்றிய வீடியோக்களில் ஒன்றில் இவர் அடையாளங்காணப்பட்டுள்ளார். இந்தப் பெண் தயாரிப்பாளர் சிறிது நேரத்தின் பின்னர் இராணுவத்தின் பிடியில் இருந்த வேளையில் கொலைசெய்யப்பட்டதாக ஐ.நா. விசாரணை ஒன்று கண்டுபிடித்தது. இசைப்பிரியாவுடன் தெளிவாக வீடியோவில் காணப்பட்டபோதும் என்ன நடந்தது என்பது பற்றி ரணசிங்க இன்று வரை விசாரிக்கப்படவில்லை. இசைப்பிரியாவின் அரைநிர்வாண உடல் வெற்றிப் புகைப்படங்களில் காணப்பட்டது.

'தமது மகளுடைய கொலைக்கான முக்கிய சாட்சி ஒருவர் மேஜர் ஜெனரலாக பதவியுயர்வு வழங்கப்படுவதைப் பார்க்கும் போது நாடுகடந்து வாழ நிர்பந்திக்கப்பட்டுள்ள உயிர் தப்பியுள்ள இசைப்பிரியாவின் குடும்பத்தினருக்கு எப்படி இருக்கும் என்று யாராவது கேட்க வேண்டும்' என சூக்கா தெரிவித்தார்.

சன்னா டி வீரசூரியா யாழ்ப்பாணத்தில் 512 ஆவது படையணியின் தளபதியாக இருந்தார். அந்தக் காலப்பகுதியில் அந்தப் படையணியும் வேறு படையணிகளும் தமிழ் சந்தேக நபர்களை தடுத்து வைத்து சித்திரவதை செய்ததில் தொடர்புபட்டிருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டது. இந்த தமிழ்ச் சந்தேக நபர்களில் சிலர் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்தால் பேட்டி காணப்பட்டார்கள்.

அதிகரித்த இராணுவ மயமாக்கல் மற்றும் ஜனாதிபதிக்கு நெருக்கமான ஓய்வுபெற்ற மற்றும் சேவையாற்றும் அதிகாரிகளுக்கு சிவில் பதவிகள் வழங்கப்பட்டு வரும் பின்னணியில் இந்தப் பதவியுயர்வுகள் இடம் பெற்றுள்ளன. கொவிட் 19 இனால் பாதுகாப்பு பற்றிய கரிசனைகள் இருந்தபோதும் ஆயுதப்படையினரை உள்ளடக்கி இந்த வாரம் கொழும்பில் ஒரு போர் ஞாபகார்த்த நிகழ்வை நடாத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் இவ்வாறான ஞாபகார்த்த நிகழ்வு வடக்கு கிழக்கில் இடம் பெறுவதைத் தடுப்பதற்கு பாதுகாப்புப் படையினரால் வைரஸ் ஒரு சாட்டாகப் பயன்படுத்தப்பட்டது.

பொதுச் சமூக மட்டத்தில் இராணுவச் செல்வாக்கு சாதாரணமாக்கப்படுவதையே நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றோம் என்று குறிப்பிட்ட சூக்கா தண்டனையிலிருந்து பாதுகாப்பு மேலும் வலுப்பெறும் வகையில் முறைப்படியற்ற வலையமைப்புக்கள் ஜனாதிபதி ராஜபக்சவின் கீழ் உத்தியோகபூர்வமானவையாக மாற்றப்பட்டு வருகின்றன எனவும் தெரிவித்தார். (ஒ.5)

## இன்று மின்தடை

யாழ்ப்பாணம், மே 23

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் இன்று சனிக்கிழமை மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இதன்படி காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை **யாழ்ப்பாண மாவட்டத்தில்** மாகியப்பிட்டி, அளவெட்டி, சண்டிலிப்பாய் வடக்கு, வெற்றிலைக்கேணி, காங்கேசன் துறை பிரதேசம், பெற்றோலியக் கூட்டுத்தாபன அலுவலகம்,பெற்றோலியம்பம்ப்ஹவுஸ், காங்கேசன்துறை கடற்படை முகாம், தெல்லிப்பழை வைத்தியசாலை, வீமன்காமம், வறுத்தலைவிளான், மயிலிட்டி, தையிட்டி, காங்கேசன்துறை, மயிலிட்டிகரிசன்5ஆவதுபொறியியல் படைமுகாம், பலாலி விமான நிலையம், மயிலிட்டி மீன்பிடித்துறைமுகம், தெல்லிப்பழை புற்றுநோய் மருத்துவமனை ஆகிய இடங்களிலும் வவுனியா மாவட்டத்தில் துட்டுவாகை சின்னத்தம்பனை, வீரபுரம்,பெரிய நொச்சிக்குளம் ஆகியவற்றிலும் மின்சாரம் தடைப்படும்.

இதேவேளை இன்று காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை **யாழ்ப்பாண மாவட்டத்தில்** ஊர்காவற்றுறை பிரதேசம்,கரம்பன் பிரதேசம்,கருவில் பிரதேசம், ஊர்காவற்றுறை மருத்துவமனை, நாரந்தனை நீர்பாசன சபை ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ)

### கடற்படையினர்

## 590 பேருக்கு 30 நாள்களில் கொரோனா

கொழும்பு,மே 23

கொரோனாத் தொற்றுக்கு இலக்கான நிலையில் சிகிச்சை பெற்று வரும் கடற்படையினரில் நேற்று வரை 250 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

ஏப்ரல் 22 ஆம் திகதி கொரோனா வைரஸ்தொற்றிய முதலாவது கடற்படைச்சிப்பாய் அடையாளம் காணப்பட்டார். அன்று முதல் நேற்று முற்பகல் 10 மணிவரை 596 கடற்படையினருக்கு கொரோனா வைரஸ் பரவியுள்ளது.

இவர்களில் 250 பேர் குணமடைந்துள்ளனர். (க-44)

## கேப்பாபிலவு தனிமைப்படுத்தல் நிலையம் முடக்கத்திலேயே

### *மக்கள் அஞ்சத் தேவையில்லை என்கிறார் பணிப்பாளர் எஸ்.சுகந்தன்*

முல்லைத்தீவு, மே 23

முல்லைத்தீவு கேப்பாப்பிலவு விமானப் படைத்தளம் வெளித்தொடர்புகள் துண்டிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்ட இடம் போன்றே இயங்குகின்றது. இதனால் பொதுமக்கள் அஞ்சத் தேவையில்லை என்று முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.சுகந்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கேப்பாபிலவு விமானப் படைத்தளம் தனிமைப்படுத்தல் நிலையமாகச் செயற்படுகின்றது. இங்கு கடற்படையினர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அந்த முகாமிலிருந்து எவரும் வெளிச் செல்ல முடியாது. அங்கு பணியாற்றுகின்றவர்கள் கூட, அந்த முகாமினுள் பிறிதொரு இடத்திலேயே தங்க வைக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் கூட முகாமை விட்டு வெளியேற முடியாது.

எனவே, முகாமிலிருந்து எவரும் சமூகத்துக்குள் வரமுடியாது. மக்கள் அச்சமடையத்தேவையில்லை, என்றார். (ஒ.5)

## 4 மாகாணங்களில் டெங்கு அபாயம்

கொழும்பு,மே 23

மழையுடனான வானிலை நீடித்து வருவதால், மேல், தென், சப்பிரகமுவ, மத்திய ஆகிய நான்கு மாகாணங்களில் டெங்கு அபாயம் அதிகம் உள்ளது என்று டெங்கு காய்ச்சல் தடுப்பு பிரிவின் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் மருத்துவர் அருணஜயசேகர எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வருடத்தின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் சுமார் 19 ஆயிரத்து 446 பேருக்கு டெங்குக் காய்ச்சல் ஏற்பட்டுள்ளது.

இவர்களில் 3 ஆயிரத்து 361 பேர் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள். தற்போது மழையுடனான காலநிலை நிலவுவதால் டெங்கு நுளம்புகள் பரவுவதற்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளன.

நீர்தேங்கியுள்ள பகுதிகளில் நீரை அகற்றவும், கிருமிநாசினி வீசவும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். டெங்கு நுளம்புகள் குறித்து மக்களுக்கு ஆலோசனை வழங்கும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட 40 க்கும் மேற்பட்ட வெளிநாட்டவர்கள் சிகிச்சை பெற்றுவருகின்றனர் என்று மருத்துவமனையின் புள்ளிவிபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது-என்றார். (க)

# வேட்புமனுக்களை விடுமுறை நாளில் ஏற்றமை தவறில்லை

## ஜனாதிபதியின் செயலர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி வாதம்

**கொழும்பு, மே 23**

**சட்டத்தின் பிரகாரம், வாக்களிப்பு தினமே விடுமுறை தினத்தில் அமையக்கூடாது. அதுவும் ஜனாதிபதி, அரசமைப்பின் 70 (5) உறுப்புரை பிரகாரம் நிர்ணயித்த திகதி, பின்னர் ஏதேனும் காரணத்துக்காக விடுமுறை தினமாக மாற்றப்பட்டால் கூட அந்தத் திகதியில் தேர்தலை நடத்தலாம். அப்படி இருக்கையில் வேட்பு மனுக்களை விடுமுறை தினத்தில் ஏற்கக்கூடாது என்று எங்கும் இல்லை. இவ்வாறு ஜனாதிபதி சட்டத்தரணி றொமேஷ் டி சில்வா வாதிட்டார்.**

பொதுத் தேர்தலை ஜூன் 20 ஆம் திகதி நடத்த எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்தையும், ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்த தீர்மானத்தையும் வலுவிழக்கச் செய்யக்கோரி உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் நேற்றுமுன்தினம் 4 ஆவது நாளாக பரிசீலனைக்கு வந்த போதே, மனுக்களில் பிரதிவாதியாக பெயரிடப்பட்டுள்ள ஜனாதிபதியின் செயலர் பி.பீ. ஜயசுந்தர சார்பில் வாதங்களை முன்வைத்து அவர் இதனை தெளிவுபடுத்தினார்.



**நாடாளுமன்றக் கலைப்பு**

ஜனாதிபதி சட்டத்தரணி றொமேஷ் டி சில்வா, அரசமைப்பின் 62(2) ஆம் உறுப்புரை பிரகாரம் நாடாளுமன்றத்தை இரு வழிகளில் கலைக்க முடியும். நாடாளுமன்றின் பதவிக்காலம் அதாவது 5 வருடங்கள் பூர்த்தியாவதன் ஊடாக நாடாளுமன்றம் கலையும். அடுத்தது நாடாளுமன்றம் நாலரை வருடங்களைப் பூர்த்தி செய்ததன் பின்னர் ஜனாதிபதியால் அதனைக் கலைக்க முடியும். ஜனாதிபதிக்கு உள்ள அதிகாரத்தின் கீழேயே நாடாளுமன்றக் கலைப்பு விடயம் முன்னெடுக்கப்படுகின்றது.

அரசமைப்பின் 70 (5) அ உறுப்புரைக்கு அமைய, நாடாளுமன்றம் கலைப்பின் பின்னர் நாடாளுமன்றத் தேர்தலுக்கான திகதி, கலைக்கப்படும் திகதியில் இருந்து மூன்று மாதங்களுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும் என்று வாதிடப்படுகின்றது. இது அடிப்படையற்றது. நாடாளுமன்றத் தேர்தல்கள் தொடர்பில் அரசமைப்பில் உள்ள விடயங்கள் நாடாளுமன்றத் தேர்தல்கள் சட்டத்துடன் சேர்த்து பார்க்கப்பட வேண்டியவை. அவ்வாறு பார்த்தால், தேர்தல் ஆணைக்குழு எப்படி ஜூன் 20 ஆம் திகதி எனும் திகதியை நிர்ணயித்தது என்று தெரியும்.

அரசமைப்பின் 70 (5) ஆம் உறுப்புரைக்கு அமைய நாடாளுமன்றக் கலைப்பின் போது மூன்று மாதங்களுக்கு உட்பட்ட தேர்தல் திகதியைக் குறிப்பிடவேண்டியது அவசியம் தான். அதனைத்தான் ஜனாதிபதி மார்ச் 2 ஆம் திகதி வர்த்தமானியில் ஏப்ரல் 25 என்று குறிப்பிட்டிருந்தார். இந்த வர்த்தமானி அறிவித்தலுடன், தேர்தல்கள் குறித்து முடிவெடுக்கும் அனைத்து அதிகாரமும் சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் சென்று விடுகின்றது.

**ஆணைக்குழுவுக்கு கட்டுப்பாடில்லை**

நாடாளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 10, 24 (3) ஆம் அத்தியாயங்களை பாருங்கள். அரசமைப்பில் உள்ள தேர்தல் நடத்துதல் குறித்த அதிகாரங்கள் பொதுத் தேர்தல் சட்டத்தின் 10 ஆம் அத்தியாயம் ஊடாக ஆணைக்குழுவுக்கு கிடைக்கின்றது. அது அரசமைப்பின் 70 (5) ஆம் உறுப்புரைப் பிரகாரம் வெளியிடப்படும் வர்த்தமானி அறிவித்தலுக்கு அமையவாகும். இங்கு ஜனாதிபதிக்கே 3 மாதங்களுக்குள் தேர்தல் திகதியை குறிப்பிட வேண்டும் என்று அரசமைப்புச் சொல்கிறது. அந்த அதிகாரம் தேர்தல்கள் ஆணைக் குழுவின் கைகளுக்குச் செல்லும் போது அங்கு நாடாளுமன்றத் தேர்தல் சட்டத்தின் பிரகாரம், ஜனாதிபதி நிர்ணயித்த திகதியை ஏதேனும் காரணத்துக்காக மாற்றும் அதிகாரம் தேர்தல்கள் ஆணைக் குழுவுக்குக் கிடைக்கின்றது. அவ்வாறு ஆணைக்குழு மீள திகதி குறிக்கும் போது, அது எத்தனை நாள்கள் அல்லது மாதங்கள் என்ற கட்டுப்பாடுகள் எல்லைச் சட்டத்தில் குறிப்பிடப்படவில்லை.

ஜனாதிபதி சட்டத்துக்கு உட்பட்டே நாடாளுமன்றத்தைக் கலைத்து வர்த்தமானி அறிவித்தலைப் பிறப்பித்தார். அது தற்போதும் சட்ட அதிகாரம் உள்ளதே. அதற்கு உட்பட்டு தேர்தல்கள் ஆணைக் குழு தேர்தல்கள் சட்டத்துக்கு அமைய எடுத்துள்ள முடிவுகளும் சரியானவையே. சட்ட ரீதியிலானவையே. அதில் எந்த பிரச்சினையும் இல்லை.

**அரசியல் 'டீல்'**

இங்கு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளோரைப் பாருங்கள். யானைச் சின்னத்தில் போட்டி போடுபவர்கள்தான் தாக்கல் செய்துள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி போன்ற எந்தக் கட்சியும் ஜனாதிபதியின் கலைப்பு வர்த்தமானியை சவாலுக்கு உட்படுத்தவில்லை. ஐக்கிய மக்கள் சக்தியின் சிலரே இங்கு வந்துள்ளனர். அவர்களுக்கு அரசியல் ரீதியிலான தேவை இருக்கின்றது. அதனாலேயே இவ்வாறு நீதிமன்றை ஏமாற்றி அதனை அடைய முயல்கின்றனர். நாடாளுமன்றம் இயங்காமல் நாடு எவ்வளவு காலத்துக்கு இயங்கலாம் என்று எந்த கால எல்லையும் அரசமைப்பில் இல்லை.

எத்தனை நாள்களுக்கு வேண்டுமானாலும் நாடாளுமன்றம் இல்லாமல் அரசைக் கொண்டு செல்ல முடியும். நாடாளுமன்றத்தின் வேலை சட்டவாக்கம் தான். சட்ட வாக்கத்தின் தேவை இல்லாத போது எதற்காக நாடாளுமன்றத்தைக் கூட்டவேண்டும். அதுவும் கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை எந்த வகையிலும் கூட்ட வேண்டிய அவசியம் இல்லை.

உண்மையில் இங்கு மனுக்களைத் தாக்கல் செய்துள்ள பலரும் கையெழுத்திட்டு ஒரு கடிதத்தை அண்மையில் ஜனாதிபதிக்கு அனுப்பினர். அதில் கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீளக் கூட்டுமாறும் அவ்வாறு கூட்டினால் நாடாளுமன்றத்துக்குள் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கி ஒன்றாகச் செயற்படத் தயார் எனவும் அதில் கூறப்பட்டிருந்தது. உண்மையில் இதனை விளங்கும் மொழியில் கூறினால் ஒரு 'டீல்' பேசப்பட்டது. அப்படியானால் மக்களின் உரிமை, அவர்களின் இறையான்மையை ஏமாற்றுவதாக அது அமையும் அல்லவா. அதற்கு ஜனாதிபதி மறுப்புத் தெரிவித்ததால், எந்த அடிப்படை உரிமையும் மீறப்பட்டிராத மக்களின் இறையாண்மையைப் பாதுகாக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு எதிராக மிகக் கீழ்த்தரமான முறையில் நடந்து கொண்டு மனுதாரர்கள் மன்றில் மனுக்களை முன்வைத்துள்ளனர்.

**அவசர நிலை இல்லை**

அரசமைப்பின் 70 (7) ஆம் உறுப்புரைக்கு அமைய நாட்டில் அவசர நிலைமை ஒன்று ஏற்படுமாயின் அதனைக் கையாள கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீள அழைக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளது. தற்போதைய கொவிட் பரவல் நிலையை மையப்படுத்தி அதனையும் மனுதாரர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். உண்மையில் நாட்டில் தற்போது அவசர நிலைமை இல்லை. அதாவது அரசமைப்பின் 70 (7) ஆம் உறுப்புரையில் கூறப்படும் அவசர அல்லது நெருக்கடி நிலைமை என்றால் என்ன? முதலில் அதனைத் தெளிவுபடுத்தவேண்டும். ஒரு சூழ்நிலையைக் கையாள புதிதாக சட்டங்கள் அல்லது சட்டதிருத்தங்கள் அவசியமாகின்ற போது, அப்போது நாடாளுமன்றம் கலைக்கப்பட்டிருந்தால் அந்த சட்டவாக்க தேவைக்காக நாடாளுமன்றத்தைக் கூட்டுவதையே அரசமைப்பின் உறுப்புரை அவசர நிலையாகக் கூறுகின்றது. தற்போதைய சூழலில் அப்படியான தேவை ஜனாதிபதிக்கு இல்லை.

கொவிட் 19 ஐ வெற்றிகரமாக எம்மிடம் உள்ள தொற்று நோய் தடுப்பு கட்டளைச் சட்டத்துக்கு அமைய அவர் கட்டுப்படுத்திக் காட்டிவிட்டார். இங்கு கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீளக் கூட்ட வேண்டிய எந்த தேவையும் இல்லை. அத்துடன் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு ஜனாதிபதி எழுதிய கடிதத்துக்கு அமைய, தேர்தல் திகதி குறித்து உயர் நீதிமன்றிடம் வியாக்கியானம் கோராமை தொடர்பிலும் குற்றம் சுமத்துகின்றனர். அது ஜனாதிபதியின் அதிகாரம் சார்ந்த விவகாரம். தெளிவான சட்டதிட்டங்கள் இருக்கையில் வீணாக உயர் நீதிமன்றிடம் வியாக்கியானம் கேட்டு நீதிமன்ற நேரத்தை வீணடிக்க ஜனாதிபதி விரும்பவில்லை.

**பொதுநிதி**

நாட்டின் பகிரங்க நிதிகள் மீதான முழுமையான கட்டுப்பாடு அரசமைப்பின் 148 ஆம் சரத்தின் பிரகாரம் அந்த அதிகாரம் நாடாளுமன்றுக்கு வழங்கப்பட்டுள்ளது. அரசமைப்பின் 150 ஆம் சரத்தின் கீழ் உள்ள உறுப்புரைகளுக் அமைய திரட்டு நிதியத்திலிருந்து ஜ திபதி செலவினங்களை முன்னெடு தற்குரிய நிலைமைகள் உருவாக்கப் டுள்ளன. பகிரங்க சேவைகளுச் (பொதுச் சேவைகளுக்கு) திரட்டும் யத்திலிருந்து செலவு செய்யலாம். இ கான அதிகாரம் ஜனாதிபதிக்கு உள் பொதுச்சேவை அல்லது பகிரா சேவைக்குப் பயன்படுத்த முடியும் பதை, அரச ஊழியர்களின் சம்ப வழங்க மட்டும் என்று நிர்ணயம் செய் கூடாது. அதற்கான அர்த்தம் பரந் - என்றார். (ஓ

# ரட்ணஜீவன் ஹூல் மீதான அழுத்தம் வெட்கம் கெட்டது

## த.மு.கூ. தலைவர் மனோ கணேசன் தெரிவிப்பு



**கொழும்பு, மே 23**

**நாடு திரும்பியுள்ள, பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூலின் புதல்வி, தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டு வீடு திரும்பியுள்ளார். இதை ஒரு சாட்டாக வைத்துக்கொண்டு, ரட்ணஜீவன் ஹூலின் மீது புதிய அழுத்தங்கள் செலுத்தப்படுகின்றன. கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் சென்ற பயணத்தில் வீதித் தடைகளில் அவருக்குத் தொல்லை தரப்பட்டுள்ளது. அவரையும் 21 நாள்கள் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கி முடக்க அரசாங்கம் திட்டமிடுவதாகத் தெரிகிறது. இவை சிறுபிள்ளைத்தனமான செயல்களாகும்.**

இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைவரும், முன்னாள் அமைச்சருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அவரது ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் உள்ளதாவது;

சர்வாதிகாரப் போக்குக்கு எதிராக ஜனநாயகத்தை வலுப்படுத்தும் நோக்கில், எங்களது ஆட்சியில் கொண்டுவரப்பட்ட சுயாதீனத்தேர்தல்கள் ஆணைக் குழுக்களின் முக்கியத்துவத்தை இன்று நாடு உணர்கின்றது.

இந்நாட்டில் ஜனநாயகம் கேள்விக்கு உள்ளாக்கப்படும் போதெல்லாம், சுயாதீனச் செயற்பாட்டில் தீவிர முன்முயற்சியுடன், செயற்படும் தேர்தல் ஆணை யகத்தின் அங்கத்தவர் பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூலை இந்த அரசாங்கம் குறிவைத்து அழுத்தம் செலுத்த முயலுகின்றமை தெளிவாகத் தெரிகிறது.

அரசியல் கட்சிகளின் தேவைக்காக செயற்படுகிறார் என்றும், அவர் 21 நாள்கள் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட வேண்டும் என்றும் அரசாங்கம் நேரடியாகவும், மறைமுகமாகவும் அவர் மீது பழிதீர்க்க முயல்வதாக நாம் கருதுகிறோம்.

தாம் இழுத்த இழுப்புக்கு அவர் உடன்படவில்லை என்ற காரணத்தால், நீண்ட காலமாகவே அவர் மீது அரசாங்க அமைச்சர்கள் காட்டாமாக உள்ளார்கள். இது இன்று அதிகரித்துள்ளது. இந்த வெட்கம் கெட்ட செயலை உடன் தலையிட்டு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ நிறுத்த வேண்டும்.

பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் வரலாறு முழுக்க சுயாதீனமானவர்தான். தேர்தல்கள் ஆணைக்குழுவில் நியமிக்கப்பட முன்னமேயே அவர் பக்கச்சார்பற்றவர் என நாட்டுக்கு நிரூபித்தவர். கடந்த காலங்களில் விடுதலைப் புலிகள் பலம் பெற்று இருந்த காலத்தில் கூட அவர் துணிச்சலுடன் தனது கருத்துகளை முன்வைக்கத்தவறவில்லை. இன்று அவர் எந்தவொரு கட்சிக்கும் சார்பாகச் செயற்படவில்லை.

இலங்கையிலும், இலங்கை விவகாரங்களில் அக்கறை கொண்ட சர்வதேச சமூகத்தின் மத்தியிலும் அவர் மீதான ஏற்புடைமை பழுதுபடாமல் இருக்கின்றது. அரசாங்கத்தின் பல நடவடிக்கைகளைப் பார்த்து ஏற்கனவே நாடும், உலகும் சிரிக்கத்தொடங்கிவிட்டன. மென்மேலும் நகைப்புக்கு ஆளாக வேண்டாம் என அரசாங்கத்துக்கு கூறிவைக்க விரும்புகிறேன் -என்றுள்ளது. (ப)



# மரம் வீழ்ந்ததால் போக்குவரத்து தடை

முல்லைத்தீவு,மே 23

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு ஏ 35 முதன்மை வீதியில் மந்துவில் பகுதியில் வீதி ஓரத்தில் நின்ற பாலை மரம் முறிந்து வீழ்ந்ததால், வீதியூடான போக்குவரத்துத் தடைப்பட்டது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நடைபெற்றது. புதுக்குடியிருப்புப் பிரதேச சபை ஊழியர்கள் மரத்தை அப்புறப்படுத்தி, வீதிப் போக்குவரத்தைச் சீர்செய்தனர். (க-19)

# சஜித் அணியை கூண்டோடு நீக்கத் தயாராகிறது ஐ.தே.க.!

## விரைவில் அதிகாரப்பூர்வ முடிவு

கொழும்பு, மே 23

சஜித் பிரேமதாச உட்பட ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் விரைவில் கட்சியில் இருந்து அதிகாரப்பூர்வமாக நீக்கப்படுவார்கள் என்று ரணில் ஆதரவு அணி உறுப்பினரான ஆசுமாரசிங்க தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவித்ததாவது:

சஜித் பிரேமதாச என்பவர் தற்போது ஐக்கிய தேசியக் கட்சியைச் சார்ந்தவர் அல்லர். அவர்தலைமையிலான அணியினர் புதிய கட்சியொன்றை ஆரம்பித்து அதன்கீழ் பொதுத் தேர்தலிலும் போட்டியிடுகின்றனர்.

பிறிதொரு கட்சியின் சார்பில் வேட்புமனு கையளித்த நாளில் இருந்தே அவர்களின் கட்சி உறுப்புரிமைக் கொள்கை அடிப்படையில் நீக்கப்பட்டது. கொழும்பில் ஊரடங்கு நடைமுறையில் உள்ளது. சட்டரீதியிலான நடவடிக்கைக்கு உடனடியாக செல்வது கடினம். சாதாரண நிலை ஏற்பட்ட பின்னர் நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ஒ,5,44)

### ஹோமாகமவில்

# விளையாட்டரங்கு திட்டம் நிறுத்தம்



கொழும்பு,மே 23

இலங்கையின் முன்னணி வீரர்களுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடலை அடுத்து ஹோமாகமவில் புதிதாக நிர்மாணிக்கப்படவிருந்த பிரமாண்டமான விளையாட்டரங்குக்கான திட்டத்தை இடைநிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் அலரிமாளிகையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஹோமாகமவில் 60 ஆயிரம் ஆசனங்களைக் கொண்ட பிரமாண்டமான சர்வதேச கிரிக்கெட் விளையாட்டரங்கை நிர்மாணிக்கவுள்ளதாகவும், அதற்கான முழுச் செலவையும் (30 -40 மில்லியன் டொலர்) ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் பொறுப்பேற்கும் எனவும் சிறிலங்கா கிரிக்கெட் நிறுவனத் தலைவர் ஷம்மி சில்வா தெரிவித்திருந்தார்.

இதனை அடுத்து மஹேல ஜயவர்தன, ரொஷான் மஹநாம, அர்ஜுன ரணதுங்க, நாமல் ராஜபக் ஷ, யோஷித்த ராஜபக் ஷ, ஆகியோர் தற்போதைய நெருக்கடி நிலையில் இந்த மைதானம் தேவைதானா என்ற கேள்வியுடன் தங்களது விமர்சனங்களை வெளியிட்டிருந்தனர்.

இவ்வாறான சூழ்நிலையிலேயே பிரதமர் தலைமையில் கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் இலங்கையின் முன்னாள் பிரபல வீரர்களான ரொஷான் மஹநாம, குமார் சங்கக்கார, சனத் ஜயசூரிய, மஹேல ஜயவர்தன, சமகால வீரர் லசித் மாலிங்க உட்பட இன்னும் பல வீரர்கள் கலந்துகொண்டு கருத்துக்களைப் பரிமாறினர்.

பாடசாலைகள் கிரிக்கெட் விளையாட்டுத்துறையை மேம்படுத்துவதற்குப் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை முன்னாள் அணித் தலைவர் மஹேல ஜயவர்தன வலியுறுத்தினார். (க)

# புலி ஆதரவாளர்கள் அரசியலில் செல்வாக்கு

## *பிவிதுறு ஹெல உறுமயவின் கண்டுபிடிப்பு*

விடுதலைப் புலிகள் அமைப்பு மற்றும் தற்கொலைக் குண்டுதாரி ஸஹ்ரான் குழு ஆகியோர் அழிக்கப்பட்டாலும், அவர்களின் ஆதரவாளர்கள் அரசியலில் செல்வாக்குச் செலுத்துகின்றனர். இவ்வாறு பிவிதுறு ஹெல உறுமய அமைப்பின் உப தலைவர் மதுமாதவ அரவிந்த தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

விடுதலைப்புலிகள் அமைப்பினதும், தற்கொலைக் குண்டுதாரி ஸஹ்ரானின் நோக்கங்களை நிறைவேற்றும் தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகள் அரசியலில் செல்வாக்கு செலுத்துகின்றனர்.

இனவாத வன்முறைகளை நாட்டில் இனியொருபோதும் தோற்றம் பெறாத அளவுக்கு தேசிய பாதுகாப்பு தற்போது பலப்படுத்தப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் விவகாரத்திலும், எதிர்தரப்பினர் இனவாத முரண்பாட்டை தோற்றுவிக்க முயற்சித்தார்கள்- என்றார். (க)

# விடுதலைப் புலிகளை மீளுருவாக்க முயற்சி

## *மூதூரில் ஒருவர் கைது*

கொழும்பு,மே 23

விடுதலைப் புலிகளை மீளுருவாக்கம் செய்ய முயன்ற குற்றச்சாட்டில், திருகோணமலை, மூதூரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று சிங்கள ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மூதூர், சேருநுவரப் பகுதிகளில் தனியார் நிதி நிறுவனங்களில் பணியாற்றுபவர்கள் உள்ளிட்ட சில இளைஞர்களின் முகநூல் கணக்குகளை சிங்கள ஊடகங்கள் வெளியிட்டிருந்தன.

பிரபாகரனின் புகைப்படம், தமிழீழ படம்உள்ளிட்டவற்றை முகநூலில் பகிர்ந்திருந்தனர். அதற்கான ஸ்கிரீன் சொட்களை அவை வெளியிட்டிருந்தன. அவர்கள் மீது புலனாய்வுப்பிரிவு நடவடிக்கையெடுக்க வேண்டுமென்றும் வலியுறுத்தின. இதையடுத்து, சிங்கள சமூக ஊடகங்களில் இது பரவலாகப் பகிரப்பட்டது.

இந்த நிலையில், அதில் தொடர்புடைய இளைஞன் ஒருவர் குற்றவியல் புலனாய்வுத்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார். மேலும் ஐவர் தொடர்பாக விசாரணை நடந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)



## டொம் ஜேசி மாங்காய்களுக்கு பைகளை பெற்றுத்தாருங்கள்

*மாற்றுத்திறனாளி கோரிக்கை*

மன்னார், மே 23

உயர் ரக (டொம் ஜேசி ) மாங்காய்கள் கட்டுவதற்குரிய பைகளைப் பெற்றுத் தருமாறு இறுதிப் போரில் அங்கவீனரான விவசாயி கோரிக்கை விடுத்துள்ளார்.

மன்னார் பெரியமடு ஈச்சளவக்கையைச் சேர்ந்த இளம்விவசாயியானஅவர் இறுதிப் போரில் கால் ஒன்றை இழந்துள்ளார். திருமணம்முடித்துமூன்று குழந்தைகளுடன் வசித்துவருகிறார். தனது வாழ்வாதாரத்துக்காக வீட்டுத் தோட்டங்களைச் செய்து வருகிறார். விவசாயத் திணைக்களத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட டொம் ஜேசி மாங்கன்றுகளை செய்கை பண்ணியுள்ளார். 50 கன்றுகளும் நல்லநிலையில்காய்க்கத் தொடங் கியுள்ளன. தற்போது அவற்றில் பூச்சித் தொற்றுகள் ஏற்பட்டு காய்கள் வீணாகிப் போகின்றன. அந்த பூச்சித்தொற்றிலிருந்து காய்களைப் பாதுகாப்பதற்கு அவற்றுக்கென்று தயார் செய்யப்பட்டுவரும் பை ஒவ்வொரு காய்க்கும் சுற்றிக் கட்டவேண்டும் இதற்காக தற்போது ஆயிரத்துக்கும் மேற்பட்ட பைகள் தேவைப்படுகின்றன என்று குறித்த விவசாயி தெரிவிக்கிறார்.

விவசாயத் திணைக்களத்தால் முன்பு, அவற்றுக்கானபைகள்வழங்கப் பட்டன. தற்போது அதை கடைகளில் வேண் டும் படிகூறப்பட்டுள்ளதுஎன்று தெரிவிக்கப்படுகிறது. கடைகளில் ஒரு பை 14 ரூபாவுக்கும் அதிகமாக விற்கப்படுவதால், அவற்றைப் பெற்றுத்தருமாறு அந்த மாற்றுத்திறனாளி கோரியுள்ளார். (ப-213)

## உயர்நீதிமன்றத்துக்கு சவால்விட்டு மைத்திரி போல் அவமானப்படாதீர்

*கோத்தாவுக்கு மங்கள அறிவுரை*

கொழும்பு, மே 23



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன போல் இந்நாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவும் உயர்நீதிமன்றத்துக்குச் சவால் விட்டு அவமானப்பட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கின்றோம் என முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தை மீளக் கூட்டுமாறு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டாலும் தாம் கூட்டப்போவதில்லை என்று நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்திருந்தார் எனச் செய்திகள் வெளியாகியிருந்தன. இது தொடர்பில் மங்கள சமரவீர கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது;

2018ஆம் ஆண்டு 52 நாள்கள் அரசியல் சதிப் புரட்சியின்போது உயர்நீதிமன்றத்துக்குச் சவால் விட்டு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால செயற்பட்டிருந்தார். நீதிமன்றத்தின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பின் பிரகாரம் கலைக்கப்பட்ட நாடாளுமன்றம் மீளக்கூட்டப்பட்டது. இதை இந்நாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவும் மனதில்கொண்டு செயற்பட வேண்டும். தற்போதைய மனுக்களின் பிரகாரம் நாடாளுமன்றக் கலைப்பு வர்த்தமானி அறிவிப்பு செல்லுபடியற்றது என உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கினால்கூட நாடாளுமன்றத்தை சபாநாயகரால் மீளக்கூட்ட முடியும். அதற்குரிய அதிகாரம் தற்போதைய அரசமைப்பில் இருக்கின்றது - என்றார். (ப-22)

## ரூ. 5000

# முதற்கட்டம் கிடைத்தோருக்கு இரண்டாம் கட்டம் வழங்கப்படும்

### சமுர்த்தி உதவிப் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம்,மே 23

**யாழ். மாவட்டத்தில் முதலாம் கட்ட 5000 ரூபா உதவிப் பணத்தைப் பெற்ற அனைவருக்கும் இரண்டாம் கட்டமாகவும் அந்தப் பண உதவி வழங்கப்படும். பொதுமக்கள் இது தொடர்பில் அச்சமடையத் தேவையில்லை.**



இவ்வாறு யாழ் மாவட்ட உதவிப் பணிப்பாளர் க.மகேஸ்வரன் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கொரோனா பாதிப்பின் காரணமாக அரசால் வழங்கப்படும் இடர் நிதியை யாழ்ப்பாண மாவட்டத்தில் வதியும் ஏப்ரல் மாத உதவித் தொகையைப் பெற்ற ஒரு லட்சத்து 35 ஆயிரத்து 113 குடும்பங்களுக்கு இரண்டாம் கட்டமாக 5 ஆயிரம் ரூபா உதவித் தொகை கட்டாயமாக வழங்கப்படும்.

இந்த உதவித்தொகை 76 ஆயிரத்து 32 சமுர்த்திப் பயனாளிகள், 11 ஆயிரம் சமுர்த்தி உதவி பெற காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்கள், 39 ஆயிரத்து 473 தொழிலற்றவர்கள் மற்றும் 8 ஆயிரத்து 608 மேன்முறையீடுகள் மூலம் இணைக்கப்பட்டோர் உள்ள குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது. முதற் கட்டமாக உதவித்தொகை பெற்ற அனைவருக்கும் இரண்டாம் கட்ட உதவித் தொகை கடந்த 18 ஆம் திகதி தொடக்கம் வழங்கப்பட்டு வருகின்றது.

இரண்டாம் கட்ட 5ஆயிரம் ரூபா கொடுப்பனவு கட்டாயம் வழங்கப்படும். எனவே இது தொடர்பில் பொது மக்கள் அச்சமடையத் தேவையில்லை அரசால் வழங்கப்படும் நிதி வழங்கலில் உள்ள தாமதத்தின் காரணமாக, மக்களுக்கு உதவித் தொகையை வழங்குவதில் தாமதம் ஏற்படுகின்றது. எனினும் அது கிரமமாக அனைவருக்கும் வழங்கப்படும்.

தங்களுடைய பிரதேச சமுர்த்தி உத்தியோகத்தர்களின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி பொதுமக்கள் இரண்டாம் கட்டக் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள முடியும்- என்றார். (க -111)

## கோத்தாவின் அறிவிப்பு ஆபத்தான சமிக்ஞை

*எச்சரிக்கிறார் சுகாஸ்*

யாழ்ப்பாணம், மே 23

இலங்கை மீது எத்தகைய விசாரணைகளை முன்னெடுத்தாலும் அதற்கு நாங்கள் கட்டுப்படமாட்டோம். இதுதான் கோத்தாபய ராஜபக்ஷ விடுத்திருக்கின்ற செய்தி. இது ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரையில் ஆபத்தான விடயம். இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சட்டஆலோசகர் க.சுகாஸ் தெரிவித்தார்.

எமது நாட்டுக்கு அநீதியான வகையில் சர்வதேச நிறுவனம் அல்லது அமைப்பு தொடர்ந்தும் செயற்படுமாக இருந்தால் அந்த நிறுவனத்தின் உறுப்புரிமையிலிருந்து இலங்கையை விலக்கிக்கொள்ள நான் ஒருபோதும் பின்நிற்கப்போவதில்லை என்று ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார்.

இந்தக் கருத்துத் தொடர்பில் சட்டத்தரணி சுகாஸ் மேலும் தெரிவித்ததாவது:

நானோ எனது நாடோ எந்தவொரு அழுத்தத்துக்கும் எந்தவொரு காலத்திலும் அடிபணியப் போவதில்லை. சர்வதேச விசாரணையாக இருந்தாலும் சரி, ஐ.நா. மனித உரிமைகள் தீர்மானத்தில் சொல்லப்பட்டுள்ள கலப்பு நீதிமன்றப் பொறிமுறையாக இருந்தாலும் சரி, அவை எதுவும் எம்மைக் கட்டுப்படுத்தாது. நாங்கள் கட்டுப்படப்போவதில்லை. இதைத்தான் அவரது உரையின் உட்கிடை சொல்லி நிற்கின்றது.

இது ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரையில் ஆபத்தான சமிக்ஞை. அவர் இராணுவத்துக்கு முன்னுரிமை கொடுத்து இராணுவ ஆட்சியை நோக்கி படிப்படியாக அரச இயந்திரத்தை நகர்த்தப் போகின்றார் என்ற அச்சம் எழுகின்றது.

ஏற்கனவே 13 அமைச்சுக்களின் செயலர்களாக முன்னாள் இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். இராணுவம் மீது அழுத்தம் பிரயோகித்தால் விலகுவேன் என்பதன் ஊடாக இராணுவத்துக்கு இன்னும் இன்னும் முன்னுரிமை கொடுக்கப்போகின்றார் என்ற செய்தியைச் சொல்லி நிற்கின்றது.

இலங்கை தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானம் வலுவானது இல்லை. சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு அல்லது குறைந்தபட்சம் இனப்படுகொலை தொடர்பில் சிறப்பு தீர்ப்பாயமாவது அமைக்கப்படவேண்டும் என்று நாம் 2012ஆம் ஆண்டிலேயே வலியுறுத்தியிருந்தோம்.

இலங்கை ஆட்சியாளர்கள் நாட்டைக் கட்டுப்படுத்தாத அமைப்புக்களின் தீர்மானத்தை அனுசரித்து நடக்கமாட்டார்கள் என்பதால்தான் இதனை நாம் 2012ஆம் ஆண்டிலேயே வலியுறுத்தியிருந்தோம். ருவண்டாவில் 1994ஆம் ஆண்டு இனப்படுகொலையுடன் தொடர்புடைய குற்றவாளி 26 ஆண்டுகளின் பின்னர் பிரான்ஸில் வைத்துக் கைது செய்யப்பட்டிருக்கின்றார். வலுவான அமைப்புக்கள் ஊடாக முன்னெடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் ஊடாகவே இது சாத்தியமானது. வலுவில்லாத அமைப்புக்களின் தீர்மானங்களை நாம் கணக்கில் எடுக்கமாட்டோம், ஆகவும் அழுத்தம் கொடுத்தால் அதிலிருந்து விலகிவிடுவோம் என்ற கோத்தபாயவின் ஆணவத்துடன் கூடிய அறிவிப்பு, நாம் 2012ஆம் ஆண்டு கூறியதுதான் சரி என்பதைக் காட்டி நிற்கின்றது - என்றார். (ஒ.5)

## எரிவாயு விலை அதிகரிக்கப்படாது

கொழும்பு,மே 23

சமையல் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்படாது என்று நுகர்வோர் விவகார அதிகார சபை அறிவித்துள்ளது.

எந்தவொரு சமையல் எரிவாயு உற்பத்தி நிறுவனமும் எரிவாயுவின் விலையை அதிகரிக்க வேண்டுமென்ற கோரிக்கையை இதுவரை முன்வைக்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளது. (க)

## டுபாயிலிருந்து திரும்பிய 15 பேருக்கு கொரோனா

டுபாயிலிருந்து நாடு திரும்பிய 15 பேருக்கு கொரோனா தொற்று நேற்று முன்தினம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவர்கள் கிராகம தனிமைப்படுத்தல் நிலையத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்று நோய்த் தடுப்புப் பிரிவு இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளது. (க)

# பேனா, கோப்பையை பகிர்வதும் ஆபத்தே!

### சுகாதார மேம்பாட்டு பணியகம் அறிவிப்பு

கொடிகாமம், மே 23

**பேனாக்கள், தட்டுகள், கோப்பைகள் போன்றவற்றை பிறருடன் பகிர்ந்துகொள்ள வேண்டாம் என்று சுகாதார மேம்பாட்டு பணியகம் அறிவித்துள்ளது.**

பணிபுரியும் இடத்தில் கொரோனாத் தொற்றை முறியடிப்பதற்கான புதிய வாழ்க்கை முறையைக் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளையும் தவிர்க்கப்பட வேண்டிய வேலைகளையும் பற்றி அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கொரோனாத் தொற்று பரவுவதைத் தடுக்கும்முகமாக தயார் நிலையில் திட்டம் ஒன்றைத் தயார் செய்யுங்கள். இப்போதும் ஒரு மீற்றர் தூரத்தைப் பேணிக் கொள்ளுங்கள். அலுவலகத் தளபாடங்களின் மேற்பரப்புகள், அடிக்கடி தொடப்படும் மேற்பரப்புக்கள் போன்றவற்றை அடிக்கடி தொற்று நீக்கிகளைப் பாவித்துச் சுத்தப்படுத்துங்கள். கதவு போன்றவற்றைத் திறந்து மூடும்போது கைகளால் தொடுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். அறைகளில் ஜன்னல் கதவுகளைத் திறந்து வைத்துக் கொள்ளுங்கள்.

வீட்டில் இருந்தபடியே அலுவலக வேலைகளைச் செய்வதற்கு ஊக்கப்படுத்துங்கள். அலுவலகங்களில் அல்லது பணிபுரியும் இடங்களில் வழக்கமாகப் பணிபுரிவோரின் மூன்றில் ஒன்று அல்லது 50 வீதம் மட்டும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் வேலையில் ஈடுபடும் வகையில் ஆயத்தப்படுத்துங்கள். அலுவலகக் கூட்டங்களை நடத்தும்போது தொலைத்தொடர்பு சாதனங்கள் மூலம் நடத்துங்கள். தேநீர் மற்றும் மதிய உணவு வேளைகளில் அனைவரும் ஒன்றுகூடுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். பணிபுரியும் இடத்தில் இருந்து அல்லது அலுவலகத்தில் இருந்து வெளிவருவதற்கு முன் கைகளைச் சவர்க்காரமிட்டு 20 வினாடிகளுக்காவது நன்கு கழுவுங்கள். ஒருவரையொருவர் தழுவிக் கொள்வதையோ, கை குலுக்குவதையோ தவிர்த்துக் கொள்ளுங்கள்.

பேனாக்கள், தட்டுகள் கோப்பைகள் போன்றவற்றைப் பிறருடன் பகிர்ந்து கொள்ள வேண்டாம். உங்களுக்கு தடிமன், இருமல் போன்ற நோய் அறிகுறிகள் இருப்பின் நீங்கள் பணிபுரியும் இடத்துக்குச் செல்வதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்-என்றுள்ளது. (ப-159)

## அரிசியை தட்டுப்பாடின்றி வழங்கக் கோரிக்கை

கொழும்பு, மே 23

சந்தையில் அரிசிக்கான தட்டுப்பாடு ஏற்படுவதைத் தடுப்பதற்காக தங்களிடமுள்ள நெல் மற்றும் அரிசியைத் தட்டுப்பாடின்றி வழங்குமாறு வர்த்தகர்கள் மற்றும் அரிசி மொத்த சேகரிப்பாளர்களிடம் நுகர்வோர் அதிகார சபை கோரிக்கை விடுத்துள்ளது.

நுகர்வோர் அதிகார சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. அரிசியைப் பதுக்கி வைக்கும் நிறுவனங்கள் மற்றும் ஆள்கள் தொடர்பில் சுற்றி வளைப்புக்களை முன்னெடுக்கவுள்ளது என்றும் அந்த அதிகார சபை தெரிவித்துள்ளது.

அண்மையில் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியிருந்தன. நெல் மற்றும் அரிசியை பதுக்கிவைப்பவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும், பிடியாணை இன்றி அவ்வாறானவர்களைக் கைது செய்ய முடியும் என்றும் நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது. அவ்வாறானவர்கள் தொடர்பில் நுகர்வோர் அதிகார சபையின் 1977 என்ற அவசர இலக்கத்துக்குத் தொடர்பு கொண்டு முறைப்பாடு செய்ய முடியும் என்று அந்த அதிகார சபை அறிவித்துள்ளது. (ப)

## தொழில் தேவைக்காக சைப்ரஸ் செல்ல அனுமதி

மன்னார், மே 23

கொரோனா அச்சுறுத்தலைத் தொடர்ந்து வெளிநாடுகளுக்கான பயணத்தடை நீக்கப்பட்டதன் பின்னர் தொழில் தேவைக்காக சைப்ரஸ் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தால் வெளியிடப்பட்ட சுகாதார விதிமுறைகளுக்கு அமைய குறித்த நாட்டுக்குப் பயணிக்க முடியும் எனவும் கூறப்பட்டுள்ளது.

சைப்ரஸில் தொழில் புரிந்து விடுமுறைக்காக நாட்டுக்குள் வந்தவர்களின் விடுமுறைக் காலம் மார்ச் 15 ஆம் திகதிக்கு பின்னர் நிறைவடையுமாயின் அவர்களால் மீண்டும் அந்த நாட்டுக்கு தொழில் வாய்ப்பிற்காகச் செல்லமுடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (ப)

## காற்றாலை மின் உற்பத்தியை துரிதப்படுத்த ஆலோசனை

மன்னார், மே 23

மன்னாரில் அமைக்கப்பட்டுவரும் நாட்டின் பெரும் காற்றாலை மின் உற்பத்தி நடவடிக்கையை துரிதப்படுத்தப்படுத்த வேண்டும் என்று திட்டத்துக்குப் பொறுப்பான அமைச்சருக்கு ஜனாதிபதி கோத்தபய ராஜபக்ச ஆலோசனை வழங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 25 பில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வரும் இந்தக் காற்றாலை மின்உற்பத்தி நடவடிக்கையை அடுத்த செப்ரெம்பர் மாதத்துக்குள் நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த திட்டத்தின் ஊடாக 103 மொஹா வோட் மின்சாரத்தை பெற்றுக் கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (ப)

## 5,000 ரூபா நிதி உதவியை நிறுத்துமாறு கூறவில்லை

*மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு*

கொழும்பு, மே 23



அரசாங்கத்தின் 5 ஆயிரம் ரூபா நிதி உதவியை நிறுத்துமாறு தாம் ஒருபோதும் வேண்டுகோள் விடுக்கவில்லை எனத் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

எனினும் 5 ஆயிரம் ரூபாக் கொடுப்பனவு தொடர்பான குற்றச்சாட்டுகள் அரசியல்தன்மை கொண்டவையாகக் காணப்பட்டதால் குறிப்பிட்ட திட்டத்தை அரசியல் கட்சியோ வேட்பாளரோ தனது பரப்புரைக்குப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கவேண்டாம் என்று அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். அதேவேளை, கொரோனா தொற்றால் வாழ்வாதாரத்தை இழந்துள்ள குடும்பங்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவை இடைநிறுத்துவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது. (ப)

## மாணவர்களுக்கு போசாக்கு உணவு

கொழும்பு, மே 23

பாடசாலை மாணவர்களின் மதிய உணவுக்காக ஒதுக்கப்பட்ட நிதியின் மூலம் மாணவர்களுக்கு போசாக்கு உணவுப் பொதிகளை வழங்க கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது. கல்வியமைச்சின் செயலாளர் என்.எச்.எம் சித்ரானந்த இதனை தெரிவித்துள்ளார்.

மாணவர் ஒருவருக்கு தலா ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த போசாக்கு உணவுப் பொதியை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வலயக் கல்விப் பணிமனைகளுடன் இணைந்து அதனை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று கல்வியமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ப)

## மக்களுக்காகவே தன்னை அர்ப்பணித்தவர் மருத்துவர் செங்கமலம்



மருத்துவர் திருமதி செங்கமலம் தெய்வேந்திரம் சென்ற மாதம் 23 ஆம் திகதி மறைந்துவிட்டார். எமது சமுதாயம், சிறந்த ஒரு சமூகசேவகியை இழந்துவிட்டது. காலமெல்லாம் நமது நாட்டிலேயே வாழ்ந்து 'அனஸ்தெட்டிஸ்த்' அல்லது மயக்க மருந்து நிபுணர் என்ற பணியை ஏற்று எத்தனையோ உயிர்களைக் காப்பாற்றிய மருத்துவர் இப்பொழுது கண்ணுக்கெட்டா கருத்தொளியிற் சென்று மறைந்துவிட்டார்.

மருத்துவர் செங்கமலம் அவர்களும் அவரது வாழ்க்கைத் துணைவர் மருத்துவர் தெய்வேந்திரம் அவர்களும் செல்வப்பெருக்கை நோக்கமாகக்கொண்டு வைத்தியத் தொழிலில் ஈடுபடவில்லை. மக்கள்மீது கொண்ட பரிவினால் வைத்தியம் செய்தவர்கள். அரச சேவையினின்றும் இளைப்பாறிய பின்னரும் வாழ்விழந்தோர் புனர்வாழ்வுக்காக தமது நேரத்தை அர்ப்பணித்தவர்கள். மருத்துவர் செங்கமலம் இறக்கும்வரை ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வுநிலையத்தின் பொருளாளராகக் கடமையாற்றியவர்.

### நீத்தார் நயப்புரை

செங்கமலம் யாழ்ப்பாணக் கல்லூரியிற் கற்று கொழும்பு வைத்தியக் கல்லூரிக்கு தெரிவானவர். யாழ்ப்பாணக் கல்லூரியின் தாராளாண்மை மற்றும் பரந்த மனப்பான்மை அவரைப் பெரிதும் கவர்ந்தன. தமது இரண்டு புதல்விகளும் கிறிஸ்தவர்களாகி கிறிஸ்தவ குடும்பங்களை அமைத்துக் கொண்ட பொழுது அவர் மனம் கோணவில்லை. நமது பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் மேனாட்டு இசை, பேச்சு என்பனவற்றில் பாண்டித்தியம் பெற வேண்டுமென்று ஊக்கமாக உழைத்தார்.

அவரின் குடும்பத்தார் கல்விச் சேவையில் ஊக்கமாக ஈடுபட்டு யாழ்ப்பாணத்தின் கல்வித்தரத்தை மேம்படுத்துகின்றனர். எத்தர்களும் ஏமாளிகளும் நிறைந்த உலகிலே நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் வாழ்ந்து வருகின்றனர். அங்கிலிக்கன் திருச்சபை இதனைக் கண்டுகொண்டது. அவரின் மகளை சுண்டுக்குளி அதிபராகவும் மருமகனை சென். ஜோன்ஸ் அதிபராகவும் நியமித்தது. அவர்கள் தொடர்ந்து மருத்துவர் செங்கமலத்தின் பெருமையைப் புதிய தலைமுறைக்கு உணர்த்திக் கொண்டேயிருப்பார்கள்.

*- பேராயர் எஸ்.ஜெபநேசன்*

## வைத்தீஸ்வரா கல்லூரி யாழ்ப்பாணம் பழைய மாணவர் மன்றம்

### Zoom காணொளி தொடர்பாடல் மூலமான விசேட பொதுக்கூட்ட அறிவித்தல்

நாட்டின் தற்போதைய சூழ்நிலை காரணமாக பொதுக் கூட்டங்களை நடத்த முடியாது உள்ளமையினால் பாடசாலை சம்பந்தமான அவசரத் தேவை காரணமாக உடனடியாக கூட்டம் ஒன்றினை நடத்த வேண்டியுள்ளதனால் Zoom காணொளி தொடர்பாடல் மூலமாக எதிர்வரும் **30.05.2020** அன்று **பிற்பகல் 4.00** மணிக்கு நடைபெறவுள்ள கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

செயலாளர்.
பழைய மாணவர் மன்றம்.
வைத்தீஸ்வரா கல்லூரி. யாழ்ப்பாணம்.

## ST. JOHN'S COLLEGE JAFFNA
## CHUNDIKULI GIRLS' COLLEGE, JAFFNA
## ADMISSION

**Grade 6 in 2021**

Grade 1 in 2021 (விண்ணப்ப திகதி 19.06.2020 வரை நீடிக்கப்பட்டுள்ளது.) G. C. E. A / L (2022 Batch) in 2020 (விண்ணப்ப திகதி 19.06.2020 வரை நீடிக்கப்பட்டுள்ளது.)

1. அ. விண்ணப்பப்படிவங்களை அந்தந்தக் கல்லூரிகளில் 26.05.2020 முதல் 19.06.2020 வரை சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை, விடுமுறை தினங்கள் தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்

ஆ. எமது விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இ. விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 19.06.2020 வெள்ளிக்கிழமை ஆகும், அத்திகதிக்கு பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டாது.

2. ஒரு படிவத்திற்கான கட்டணம் ரூபா 1000.00
3. விண்ணப்பப்படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி (Photocopy) இணைக்கப்பட வேண்டும்.
4. வயதெல்லைகள்:

" தரம் 1 விண்ணப்பதாரி 01.02.2015 க்கும் 31.01.2016 இற்குமிடையில் பிறந்திருத்தல் வேண்டும்."

தரம் 6 விண்ணப்பதாரி 01.02.2010 க்கும் 31.01.2011 இற்குமிடையில் பிறந்திருத்தல் வேண்டும்.

தரம் 12 (A/L 2022 Batch) விண்ணப்பதாரி 01.02.2003 இல் அல்லது அதற்குப் பின் பிறந்திருத்தல் வேண்டும்.

**அதிபர்கள்.**

## மரண அறிவித்தல்

தோற்றம்
07
12
1932



மறைவு
14
05
2020

### திருமதி பரமேஸ்வரி கைலாசபிள்ளை

யாழ்.நல்லூர் சங்கிலியன் வீதியை பிறப்பிடமாகவும், சாவகச்சேரி சங்கத்தானை, வினிபெக் கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி கைலாசபிள்ளை கடந்த (14.05. 2020) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை கனகம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான தம்பு நாகம்மா தம்பதி யரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தம்பு கைலாசபிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, சண்முகசுந்தரம் ஆகியோரின் அன்பு சகோதரியும், ஈஸ்வரதாஸ், சத்தியதாஸ், சுகந்தினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவமலர், ஆனந்தமகேஸ்வரி, காலஞ்சென்ற தேவராஜன் ஆகியோரின் அன்பு மாமியாரும், மயூரா, லஷ்மிதா, சாரங்கா, சாருகா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த (19.05.2020) செவ்வாய்க்கிழமை கனடாவில் வினிபெக்கில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: **குடும்பத்தினர்.**

**தொடர்புகளுக்கு:**
**ஈசன்** - Home- 416 498 5113, Mobile - 416 859 2978
**சத்தி** - Home- 604 5657 669, Mobile - 778 855 6884
**சுகந்தி** - Home- 204 255 7396, Mobile - 204 880 8342

## வாடகைக்கு தேவை

சாரதி இல்லாமல் வாகனம் வாடகைக்குத் தேவை.
தொடர்புக்கு: 077 9065 849, 076 9716 225

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் K.K.S. பலாலி விமான நிலையத்துக்கு அண்மையில் 18,12,8,10 பரப்பு காணிகள் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 076 172 4033

## வீடு விற்பனைக்கு அல்லது வாடகைக்கு

கொழும்புத்துறை வீதி, கணக்கர் சந்தியில் விசாலமான வீடு வாடகைக்கு அல்லது விற்பனைக்கு உண்டு. நிறுவனங்களுக்கு உகந்தது.
தொடர்புகளுக்கு:
076 722 7530, 077 466 8148

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1983. 11இல் சூரியன் செவ்வாய் உள்ள சுவிசில் PR உடைய படித்த Watch maker CFC (the international equivalent degree of swiss federal) மகனுக்கு படித்த பெண்ணை எதிர்பார்க்கின்றனர்.
தொடர்பு:- 077 3400 910, 077 6305 843

## வேலையாள் தேவை

Electrical & Electronic வேலை அனுபவம் உள்ளவர்கள் வேலைநாள்களில் காலை 9 - 11 மணிவரைக்கும் நேரில் சமுகம் தரவும். அல்லது விண்ணப்பிக்கவும்.

அதிதீரன் மின்சார பொறியியல் இலக்கு
இல.69, கலைவாணி வீதி,
தையிட்டி, காங்கேசன்துறை.
077 717 9911

## மரண அறிவித்தல்

தோற்றம்
08
07
1950



மறைவு
15
05
2020

### திருமதி இராஜேஸ்வரி சிவலிங்கம்

கொழும்பைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி சிவலிங்கம் கடந்த (15.05.2020) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம் முத்தம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இரத்தினசிங்கம் அன்னபூரணி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவலிங்கத்தின் அன்பு மனைவியும், சுஜித்தா, பிரதீபா, தமயந்தி, சுரேகா, அஜித்தா ஆகியோரின் அன்புத் தாயாரும், முகுந்தன், அகிலன், பிரதீபன், உமர், ரூபன் ஆகியேரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற கந்தசாமி, நாகேஸ்வரி, சோமேஸ்வரி, சோமநாதன், கணேஸராஜா ஆகியோரின், அன்பு சகோதரியும், ஞானபூங்கோதை, செல்லமணி, ஜெகநாதன், தனலட்சுமி, செல்வராணி, தேவி, பரமேஸ்வரி, தியாகலிங்கம், ரூபி, சாந்தகுமார், திருக்குமார் ஆகியோரின் அன்பு மைத்துனியும், வாசனா, சச்சின், ஹீரா, நிரின், லியானா, கியானா, கயன்சிவா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.05.2020) ஞாயிற்றுக் கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நெடுங்கண்டல், அடம்பன், மன்னார்.**
**தொ.பே: 023 2051 811**

தகவல்:
**செல்லமணி குடும்பம்**

# தேர்தல் நடத்துவதற்கான சூழல் உருவாகின்றதாம்!

தேர்தலை நடத்துவதற்கான சூழல் தற்போது உருவாகியிருப்பதாகவும் அதற்காக சுகாதா ரத்துறை பரிந்துரை வழங்க தயாராக உள்ளது என்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

தேர்தல் திகதியைக் குறிப்பது எமது பொறுப்பல்ல. அது தேர்தல்கள் ஆணைக் குழுவின் கடமை. அவர்களுக்கு உதவிசெய்ய எமக்கு முடியும். நாடு தற்சமயம் வழமைக்குத் திரும்புகின்றது. தேர்தலை நடத்துவதற்கான பரிந்துரைகளைக் கேட்டால் அதனை வழங்க நாம் தயார் என்று அவர் மேலும் தெரிவித்தார். (து)

## மாணவர்களின்...

நேற்று நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

பாடசாலை மாணவர்களைப் பாதுகாப்பதற்கான அரசின் தேசிய வேலைத் திட்டம் தொடர்பாகத் தவறான வதந்திகளைப் பரப்புவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். இன்று (நேற்று) அச்சு ஊடங்களில் பாடசாலைகள் ஆரம்பிப்பது தொடர்பாகத் தவறான அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.

பாடசாலைகளில் சுகாதார வசதிகளை மேம்படுத்த அனைத்து பாடசாலைகளுக்கும் அரசு நிதி வழங்கும். பாடசாலைகளுக்கு அகச்சிவப்பு வெப்பமானிகளை (இன்பாரெட் தெர்மோமீற்றர்) அரசு வழங்கும். தேவையான பிற வசதிகளைப் பாடசாலைகளின் நிர்வாகம் செய்ய வேண்டும் என்றும் அறிக்கை ஒன்றின் ஊடாகப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

சுகாதார அறைகளுக்கு அகச்சிவப்பு வெப்பமானிகள், நீரோடும் சிங்குகள், படுக்கைகளை வழங்குவதற்கான முடிவு எட்டப்பட்டுள்ளது. 200க்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளுக்குத் தேவையான உபகரணங்களைப் பெற 30 ஆயிரம் ரூபாவை வழங்க மதிப்பீடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த திட்டத்துக் காக ஒவ்வொரு மாகாணத்துக்கும் 30 மில்லியன் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது. பாடசாலைகளை மீண்டும் திறக்கும்போது பெற்றோர்கள்தேவையற்றஅச்சம்கொள்ளத்தேவையில்லை - என்றார். (எ)

## தேவை

பலாலி வீதியில் உள்ள Hardware கடைக்கு
கணக்காளர் (பெண்)
விற்பனைப்பிரதிநிதி (ஆண்) தேவை.
தொடர்பு:- 077 4466 429

## வீட்டு பணிப்பெண் தேவை

யாழ். கொக்குவில் பகுதியில் அமைந்துள்ள சிறிய குடும்பம் ஒன்றுக்கு வீட்டுப் பணிப்பெண் தேவை.
தொடர்பு:- 077 674 0265

## வீடு வாடகைக்கு தேவை

யாழ். நகருக்கு அண்மையாக சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு தேவை.
தொடர்பு:- 077 648 0799

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி சரஸ்வதி தேவராசா



தோற்றம் 19.05.1944 மறைவு 27.05.2017

திதி - பூர்வபஷ்ச துதியை (24.05.2020)

மூன்றாண்டு கழிந்தது அம்மா – இன்று
ஆனாலும் உங்கள் நினைவுகள் அழியவில்லை.
அருமையான உமது திருமுகத்தை மீண்டும்
அன்புடன் காண்பதற்கு தவிக்கின்றோம்.

**நினைவில் கணவர்,**
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்**

புதுவீதி (நீதிராஜா வீதி) கொக்குவில்
மேற்கு, கொக்குவில்.
077 615 3877, 021 222 5499

## யாழ்ப்பாணம் லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவ கல்லூரியின் பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பம் கோரல் - 2020

யாழ்ப்பாணம் லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவ கல்லூரியின் பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

(விண்ணப்பங்களுடன் தகைமை சான்றிதழ்களின் பிரதியினை இணைத்து அனுப்பிவைக்கவும்)

**1. பதவி : பதிவாளர்** (Registrar) **ஒப்பந்த அடிப்படை**

**தகைமை :**

i) முகாமைத்துவ உதவியாளர் சேவையில் 15 வருடங்களுக்கு குறையாத அனுபவம்
ii) சேவையின் போது முகாமைத்துவம் தொடர்பாக பெற்ற பயிற்சிகள்
iii) பதிவாளர் தொடர்பாக வெளிக்கொணரப்பட்ட செயற்திறன்

**வேலை விபரம் :**

- புதிய மாணவர்களினை உட்சேர்ப்பதற்கான விண்ணப்பங்களை கோருதல் அட்டவணைப் படுத்தல்.
- முகாமைத்துவ குழுவிற்கு தகுதியான விண்ணப்பதாரர்களின் பட்டியலை சமர்ப்பித்தல்.
- குழுவினால் அறிவுறுத்தப்பட்டபடி நேர்முகப்பரீட்சையினை நடாத்துதல்.
- சபையின் சிபார்சுகளை குழுவின் அனுமதிக்கு சமர்ப்பித்தல் மற்றும் "மாணவர்களுக்கு தெரிவுக் கடிதங்களை அனுப்புதல் போன்ற மாணவர் சேர்ப்பிற்காக பொறுப்பாதல்
- கல்லூரி அதிபருடைய கையொப்பத்துடன் தெரிவு செய்யப்பட்டோரின் பட்டியலை ஆயுர்வேத திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் (கல்வி மற்றும் வைத்தியசாலைச்சபை)
- தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான கோவைகளைப் பராமரித்தல் கல்லூரி அதிபர் மற்றும் உப அதிபருடனான ஆலோசனையுடன் பரீட்சை மற்றும் பதிவு செய்கைக்காக ஆயுர்வேத திணைக்களத்துடன் இணைப்பு செய்தல்.
- விரிவுரையாளர்களின் வரவுக்கான சரிபார்த்தல் பட்டியலை (Check roll) பராமரிக்க வேண்டிய துடன் அதனை மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்திற்கு ஒவ்வொரு மாதமும் சமர்ப்பித்தல்

**வயது எல்லை :**06.06.2020 அன்று 65 வயதுக்கு உட்பட்வராக இருத்தல் வேண்டும்.
**மாதாந்த கொடுப்பனவு :** 36.350.00

**2. பதவி : முகாமைத்துவ உதவியாளர்** (Management Assistant) **ஒப்பந்த அடிப்படை**

**தகைமை :**

i) க.பொ.த சாதாரண தரத்தில் ஒரே தடவையில் கணிதம். தமிழ் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தி அத்துடன் க.பொ.த உயர்தர பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தி
ii) நூலக கடமையில் 2 வருட கால அனுபவம். மேலதிக மூன்று வருடங்களுக்கு புள்ளிகள் வழங்கப்படும்.
iii)நூலக விஞ்ஞான கற்கை நெறியினை தொடர்தல் / பூர்த்தி செய்திருத்தல்
iv)முகாமைத்துவ உதவியாளர் மற்றும் நூலக உதவியாளர் பதவி தொடர்பாக வெளிக் கொணரப்பட்ட செயற்திறன்

**வேலை விபரம் :**

- கல்லூரி அதிபர். உப அதிபர் மற்றும் பதிவாளருக்கு அவர்களுடைய பொறுப்புக்களில் உதவுவதற்கு பொறுப்பாதல்
- ல.சி.ஆ.ம.கல்லூரியின் கற்கை நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான பொருட்பதிவேடுகள் மற்றும் பதிவேடுகளை பராமரித்தல்.
- கல்லூரியின் நூலகத்தில் நூலக உதவியாளர் கடமைகளை கவனிப்பதுடன் நூலகம் தொடர்பான பதிவேடுகளையும் பராமரித்தல்.
- கல்லூரியின் சிற்றூழியர்களின் மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு
- கோவைகளின் பராமரிப்பு.
- பதிவாளர் மேற்பார்வையின் கீழ் கடமைகளை நிறைவேற்றுதல்.

**வயது எல்லை :** 06.06.2020 அன்று 21 வயதுக்கு மேற்பட்டவராகவும் 40 வயதுக்கு உட்பட்டவராகவும் இருக்க வேண்டும்.
**மாதாந்த கொடுப்பனவு :** 28.940.00

**3. பதவி : சாதாரண தொழிலாளி** (Office labourer) **ஒப்பந்த அடிப்படை**

i) க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாமல் இரண்டு திறமைச்சித்தி களுடன் 6 பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும்
ii)சாதாரண தொழிலாளி பதவி தொடர்பாக வெளிக்கொணரப்பட்ட செயற்திறன்

**வேலை விபரம் :**

- கல்லூரியின் சுற்றாடலின் சுத்தத்திற்கு பொறுப்பாதல்.
- கல்லூரியில் காணப்படும் மலசகூடம் உட்பட கழிவகற்றும் தொகுதிகளை தூய்மையாக பராமரித்தல் மற்றும் கழிவுநீர் மற்றும் வடிகால் தொகுதிகளை சீராக பராமரித்தல்.
- கல்லூரி அதிபர் மற்றும் பதிவாளரினால் வழங்கப்படும் வேலைகளை செய்தல்.

**வயது எல்லை :** 06.06.2020 அன்று 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் 40 வயதுக்கு உட்பட்டவராகவும் இருக்க வேண்டும்
**மாதாந்த கொடுப்பனவு :** 24.250.00

சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தினை 06.06.2020 ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் பிரிவு கிராம சேவை உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியின் பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பம் - 2020"** எனக் குறிப்பிட்டு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

**விண்ணப்பம் அனுப்பி வைக்க வேண்டிய முகவரி -**
**தலைவர்,**
**வட இலங்கை சுதேச மருத்துவ சபை,**
**லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவ கல்லூரி,**
**மின்சார நிலைய வீதி, சுன்னாகம்.**

## மரண அறிவித்தல்

### கார்த்திகேசு மங்கையற்கரசி



தோற்றம் 27.01.1940 மறைவு 20.05.2020

பலவத்தை வியாபாரிமூலை. பருத்தித்துறையைப் பிறப்பிடமாக வும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கா.மங்கையற்கரசி கடந்த **(20.05.2020)** புதன் கிழமை இறைபதம் அடைந் துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்தி கேசுவின் (துபாலதிபர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர் களான மதியழகன். மனோகரன் மற்றும் சோதிமதி. இளங்கோ ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை **(24.05.2020)** ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**

ES Printers
357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 26 ... 08 ... 1946
மறைவு 28 ... 05 ... 2017

### அமரர் சிவசுப்பிரமணியம் தெய்வநாயகி

**(கதிரவேலர் பூவரசன்குளம், ஓமந்தை, வவுனியா)**

திதி:- திருதியை (25.05.2020) திங்கட்கிழமை

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்.
**அம்மா, அம்மம்மா, அப்பம்மா**
பாசத்தின் பிறப்பிடமாய் வாழ்வின் வழிகாட்டியாய்
எம்மை வழிநடத்திய தெய்வமே
அன்பு, அரவணைப்பு, அக்கறை, பாசம், நேசம், தியாகம் என எல்லா உணர்வுகளையும் எமக்களித்த
எமது அன்பு அம்மாவே
மூன்று ஆண்டுகள் முற்றுப் பெற்றிடினும் மூழ்காது உங்கள் நினைவுகள் எம் மனதை விட்டு அம்மா!

என்றும் உங்கள் நினைவுகளுடன்
கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
தொலைபேசி இல:- 024 222 0418

இல.49/92, கோவில் வீதி,
குருமன்காடு, வவுனியா

## மரண அறிவித்தல்

### அமிர்தநாயகம் இருதயமலர் (மலர்)



பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும் வதிவிடமாக வும் கொண்ட அமிர்தநாயகம் இருதயமலர் (மலர்) நேற்று (22.05.2020) வெள்ளிக் கிழமை காலமானார்..

அன்னார் காலஞ்சென்றவர்களான மோசெஸ் மரியாச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான ஜோசப் லேனம் தம்பதியரின் அன்பு மருமகளும், ஜோசப் அமிர்தநாயகத்தின் அன்பு மனைவியும், நியூமன், (ஜேர்மனி), தர்ஷினி (நெதர்லாந்து), டயஸ் (பெல்ஜியம்), தமிழினி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற சிங்கராஜர் (வைத்திய கலாநிதி), அருமைநாயகம் (வெலிச்சோர்), எலிசபெத், காலஞ்சென்ற சொர்ணம்மா, பாக்கியநாதர், பீற்றர் இராசநாயகம் (அரசு-பிரான்ஸ்), அருள்நேசன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஆசா, ஜெயசீலன், றஜீவா, வைமன் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற புஸ்பராணி, ஜெயராணி, யசிந்தா மற்றும் இருதயநாயகம், ஜெயமலர் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், நகிஷா, றிஷானா, நயோமியா, ஜெப்றி, நயோமி, டெவினா, டெவின், றிகானா, ஜெறூன், யாசோன், இல்க்கியா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (24.05.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் புனித செபமாலை அன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்பு:**

**நியூமன் :** 0049292131154, 0049176160060 8
**தர்ஷினி :** 0031786145752, 0031644195050
**டயஸ் :** 0032493810112, 003236677785
**தமிழினி :** 00497156910197 6, 0049774900091 6
**ஜெறோம்:** 0094772328166
**யூட் :** 0094776176737, 0094766398671

## ஆதன பெயர்மாற்றம் தொடர்பான அறிவித்தல்

**வலிகாமம் தெற்கு பிரதேச சபை**

**உப அலுவலகம், உடுவில். வட்டாரம் -4 சாமுவேல்மான் வீதி , ஆதன இல 239**

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் உடுவில் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 4 சாமுவேல்மான் வீதியில் அமைந்துள்ள 239 ஆம் இலக்க ஆதனமானது எமது ஆதன வரிப் பதிவேட்டில் , சிவஞானம் ஸ்ரீஸ்கந்தநாதன் எனும் பெயரில் உள்ளது.

பிரசித்த நொத்தாரிசு இ.வசந்தசேனன் முகதாவில் வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்கு உடுவில் கோவிற்பற்று சங்குவேலி இறையில் அமைந்துள்ள "நீலக்கம்பனோடை" எனக்குறிப்பிடப்பட்டுள்ள நிலப்பரப்பு 3, குளி 6 3/4 உம் வீடும் கிணறும் செய்பயிர் வான் பயிர்களும் உடைய இந்தஆதனமானது கந்தையா முருகேச பிள்ளையும் பெண் செல்வறதியும் ஆகியோரால் வெளிப்படுத்தல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாதனமானது எங்கள் இரண்டாம் பேரின் சகோதரன் சிவஞானம் சிறிஸ்கந்தநாதன் பேரில் பிரசித்த நொத்தாரிஸ் ச.கனகசபாபதி முகதாவில் 1978ம் ஆண்டு புரட்டாதி மாதம் 3ம் திகதியில் 8389ம் இலக்கத்தில் முடிந்த உறுதியால் அவரின் முதுசப்பணம் கொள்விலையும் ஆகும். எனவும் இவ்வாதனம் அவர் திருமணம் செய்யும் முன்பே வாங்கப்பட்டது எனவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. குறித்த சிறிஸ்கந்தநாதன் 1989ம் ஆண்டில் திடீரென வெளிநாடு செல்ல ஏற்பட்ட போது இவ்வாதனத்தை எங்களின் 2ம் பேருக்கு நன்கொடையாகக் கையளித்து ஆட்சியையும் தன்வசமே ஒப்படைத்துச் சென்றார் எனவும் அந்த நாளிலிருந்து இன்று வரை குறித்த ஆதனத்தின் ஆட்சியுடைமை தன்வசமே உள்ளது எனவும் குறித்த சிறிஸ்கந்தநாதன் 2018.01.30 இல் இறந்துவிட்டார். அவர் இறந்த பின்பே தான் நன்கொடையாக எழுதிய உறுதியை எடுக்கமுற்பட்டதாகவும் அவ் உறுதி கிடைக்கவில்லை எனவும் தற்போது இவ்வாதனத்திற்கு - தானே சொந்தமும் நிந்தமுமாவேன் என முருகேசபிள்ளை பெண் செல்வறதியால் பிரசித்த நொத்தாரிசு இ.வசந்தசேனன் முகதாவில் 12304 இலக்க 2018.09.15 ஆம் திகதிய உறுதி மூலம் வெளிப்படுத்தல் செய்யப்பட்டுள்ளது.

மேலும் உத்தரவு பெற்ற உலாந்தா ந.கேதீஸ்வரன் அவர்களால் 2019.12.19 இல் அளந்து தயாரிக்கப்பட்ட 4505/1 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 01 எனக்குறிப்பிடப்பட்டுள்ள குறித்த நில.பர 2 குளி 04.18 உம் அதற்குரியவைகளும் இதற்தெற்கெல்லைகளாக
கிழக்கு :- ஜெயச்சந்திரன் பெண் வசந்தியின் ஆதனமும் ,
வடக்கு :- டச்சு றோட்
தெற்கு :- சிவஞானம் விக்னேஸ்வரன் ஆதனமும்
மேற்கு :- கை ஒழுங்கையும் அமைந்துள்ளது.

எனவே மேற்குறித்த ஆதனத்தினை கந்தையா முருகேசபிள்ளை பெண் செல்வறதி தனது பெயரில் பெயர்மாற்றம் செய்வதற்காக விண்ணப்பித்துள்ளார்.

எனவே இப்பெயர்மாற்றம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் அல்லது உரிமை கோருபவர்கள் எவராவது இருந்தால் உரிய ஆவணங்களுடன் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு எவரும் ஆட்சேபனை தெரிவிக்கவோ உரிமைகோரவோ இல்லையெனின் குறித்த ஆதனமானது முருகேச பிள்ளை பெண் செல்வறதி எனும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

மேலும் இப்பெயர் மாற்றத்தால் ஏற்படக்கூடிய எவ்விளைவுகளிற்கும் வலிகாமம் தெற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தவிசாளர்,**

**2020.05.22** **வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 21 . 09 . 1958

மறைவு 25 . 04 . 2020

### அமரர் செல்வி ஞானேஸ்வரி நாகேசு

புங்குடுதீவு நடுவுத்துருத்தி, 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 615, ஆடியபாதம் வீதி, நல்லூர்,யாழ்ப்பாணம் என்னும் முகவரியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் செல்வி ஞானேஸ்வரி நாகேசு காலஞ்சென்றவர்களான நாகேசு, கமலமக்கா தம்பதிகளின் மகள் கடந்த (25.04.2020) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் எதிர்வரும் (25.05.2020) திங்கட்கிழமை பகல் 12.00 மணியளவில் அவரது தற்காலிக வசிப்பிடமான 615, ஆடியபாதம் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசண நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்
சு.மயில்வாகனம் (மைத்துனர்) - (ஓய்வுநிலை ஆசிரியர்)
சகோதரிகளான மணி, புஸ்பம்

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி ஸ்ரீ ரஞ்ஜினி செல்வராஜா

(நீதிமன்ற வீதி, மல்லாகம்)
(இளைப்பாறிய இலங்கை வங்கி உத்தியோகத்தர்)
திதி : திருதியை - 25.05.2020


தோற்றம் - 13.10.1948 மறைவு - 11.06.2013

ஆண்டுகள் ஏழு ஆனபோதும் ஆறவில்லை எம் துயரம்
ஏழு ஆண்டுகள் என்ன எத்தனை
ஆண்டுகள் சென்றாலும் உங்கள்
நினைவுகள் எம் மனதை விட்டு நீங்காது

கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
மற்றும் சகோதரர்கள்.

(IN 9213) (14.17)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### வீரசிங்கம் காராளசிங்கம்

நினைவு அது நீங்கவில்லை
எம் ஈரவிழிகள் காயவில்லை
அன்பான அப்பாவாக
அழகான வாழ்க்கையில்
நிலவாக வாழ்ந்தீரோ
முத்தான உம் புன்சிரிப்பை
எப்படித்தான் நாம் மறப்போம்
மாண்டு போக முடியாமல்
மௌனமாக அழுகின்றோம்
மனதோடு போராடும்
மறையாத ஞாபகங்களுடன்
என்றும் உங்கள் ஆத்மா
சாந்தியடைய எல்லாம்வல்ல
நல்லூர் கந்தனை பிரார்த்திக்கின்றோம்.
என்றென்றும் உங்கள் பாசநினைவுகளோடு
வாழ்ந்து கொண்டிருக்கும்

**உங்கள் குடும்பத்தினர்.**

**இராச வீதி,**
**மாசுவன் சந்தி, நீர்வேலி வடக்கு.**

# எரிபொருள் விலையை அதிகரிக்க அரசின் அனுமதி தேவையில்லை

2003ஆம் ஆண்டு இந்தியன் எரிபொருள் நிறுவனத்துடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின்படி, அந்த நிறுவனம் எரிபொருள்களின் விலையை அதிகரிக்கவேண்டுமாயின் இலங்கை நிதியமைச் சின் அனுமதியைப் பெறத்தேவையில்லை என்று பெற்றோலியத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

தமது அமைச்சில் இடம்பெற்ற சந்திப்பு ஒன்றின்போது அமைச்சர் இந்தத்தகவலைவெளியிட்டார்.

ஐ.ஓ.சி. எரிபொருள் விலை அதிகரிப்பு தொடர்பில் இலங்கையின் நிதியமைச்சுக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தியுள்ளது.

எனினும், 2003 உடன்படிக்கையின்படி ஐ.ஓ.சி. எரிபொருள்களின் விலைகளை திடீரென அதிகரிக்கமுடியும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

எனவே தமது அமைச்சு இந்தவிடயத்தில் தலையிடமுடியாது என்றும் தெரிவித்தார்.

குறித்த உடன்படிக்கை தொடர்பில் தமக்கு அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு அமைச்சின் செயலாளருக்கு பணித்துள்ளதாகவும் தெரிவித்த அமைச்சர், இதன்பின்னரே உடன்படிக்கையில் திருத்தங்கள் ஏதாவது மேற்கொள்ளமுடியுமா என்பதை ஆராயமுடியும் என்று மேலும் தெரிவித்தார். (த)

# கொரோனாவால் வறுமை கட்டாயம் அதிகரித்தே தீரும்

## பொருளியல் பேராசிரியர் சுட்டிக்காட்டு

**கொழும்பு, மே 23**

**கொரோனா வைரஸ் காரணமாக இலங்கையில் வறுமை நிலை அதிகரிப்பது தவிர்க்க முடியாத விடயம் என்று கொழும்பு பல்கலைக்கழக பொருளியல் பேராசிரியர் சிறிமால் அபயரட்ண தெரிவித்துள்ளார்.**

வறுமையைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டியது அரசின் கடமை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நகரப்பகுதிகளில் வாழும் வறிய மக்களே இவ்வாறு வறுமையால் அதிகளவில் பாதிக்கப்படப்போகின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இவர்கள் நாளாந்தம் உழைப்பவர்கள், முறைசாராத்தொழில் துறைகளில் உள்ளவர்கள். கிராமங்களில் உள்ள வறியவர்கள் போல இவர்கள் விவசாயத்தில் ஈடுபடுவதில்லை என்றும் பேராசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையை தடுத்து நிறுத்துவதற்கு அரசு குறுகிய கால நீண்டகால நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்றும் பொருளியல் பேராசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறுகிய காலத்தில் வறுமையைக் கட்டுப்படுத்துவதற்காக பல வழிகளில் நிதியைச் செலவிடவேண்டியிருக்கும். பல நாடுகளில் வேலைவாய்ப்பற்ற நிலையில் உள்ளவர்களுக்கு கொடுப்பனவுகளை வழங்கவேண்டியிருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்

வறியவர்கள் குறித்து கவனம் செலுத்தவேண்டிய கடப்பாடு அரசுக்கு உள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (த)

வீடு வாடகைக்கு உண்டு
நாச்சிமார் கோவிலடிக்கு (தேர்முட்டி) முன்பாக 958/2, K.K.S வீதியில் சகல வசதிகளுடன் கூடிய மேல்மாடி வீடு
(அரச, தனியார் நிறுவனங்களுக்கு மட்டும்)
வாடகைக்கு விடப்படும்.
தொடர்புக்கு:- 021 222 5176, 0014 1661 77127
958/2, K.K.S Road, நாச்சிமார் கோவில்.

Physics Class
இணைய வழி கற்பித்தல்
A/L 2020,2021,2022
மாணவர்களுக்கானது
குழுவாகவும் தனியாகவும் கற்பிக்கப்படும்.
ஆசிரியர்:
திரு.ம.ஸ்பெல்மன் B.Sc.PGDE
யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு:077 611 6724



UKI
எங்கிருந்தும்
கற்றுக்கொள்ளுங்கள்
Full-stack Web Development
மென்பொருள் கம்பனியில் இணைந்து மென்பொருள் அபிவிருத்தியாளர் ஆகவேண்டுமா? அல்லது ஒரு தொழில்நுட்பம் சார்ந்த கம்பனியை ஆரம்பிக்கவேண்டுமா?
4 மாதங்களுக்கான 100% இணையவழிக்கற்கை.
தகைமை : கா. பொ. த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றி இருத்தல் மற்றும் ஒரு நாளில் 6 மணித்தியாலங்கள் செலவிடக்கூடியதாக இருத்தல்.
மொழிமூலம்: தமிழ்
28.05.2020 முன் விண்ணப்பிக்கவும்
விண்ணப்ப படிவங்களை பெற்றுக் கொள்ள www.uki.life என்ற இணையத்தளத்தினை பார்வையிடவும்.
மேலதிக தகவல்களுக்கு
www.uki.life info@uki.life 0775694587

# காதலியை கூட்டிச்சென்று பணத்துக்கு விற்ற காதலன்

## மொனராகலையில் சம்பவம்

கொழும்பு, மே 23

மொனராகலையில் பெண்ணை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினர் என்ற குற்றச்சாட்டில் இருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பெண்ணை விடுதிக்கு அழைத்துச்சென்ற பெண்ணின் காதலன் விடுதி முகாமையாளரிடம் பணத்தை பெற்றுக் கொண்டு அவரிடம் பெண்ணை விட்டுச் சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து விடுதியை முற்றுகையிட்டு விடுதியின் முகாமையாளர், மற்றும் காதலன் ஆகிய இருவரையும் பொலிஸார் கைதுசெய்தனர்.

இருவரையும் எதிர்வரும் ஜுன் மாதம் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மொனராகலை நீதிவான் உத்தரவிட்டார். (த)

# வெண்கரத்துக்கு நிழற்பிரதி இயந்திரம்

யாழ்ப்பாணம், மே 23

'வெண்கரம்' அமைப்புக்கு புலம்பெயர் கொடையாளரால் நிழற்பிரதி இயந்திரம் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

கல்விக்கு வறுமை தடையாக இருக் கக்கூடாது என்ற எண்ணத்து க்க மைய படிப்பகங்களை அமைத்து செயற் பட்டுவரும் வெண்க ரம் அமைப்பின் கல்விச் செயற்பாட்டை ஊக்குவிப்பதற்காக நிழற் பிரதி இயந்திரம் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

சுவிட்சர்லாந்து வாழ் ஈழத்தமிழரான எச்.எம். இமோவெல்ற் ஏ.ஜி. கட்டுமான நிறுவனத்தின் உரிமையாளர் முருகேசன் உதயணனின் ஏற்பாட்டில் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான இந்த நிழற்பிரதி இயந்திரம் வழங்கப்பட்டது.

க.பொ.த சா/தர மாணவர்களுக்கு கொரோனா இடர்கால விசேட செயற்றிட்டமொன்றை வெண்கரம் அமைப்பு செயற்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த)

# வர்த்தமானியை வலுவிழக்கசெய்ய ஐ.தே.கவும் மனு

கொழும்பு, மே 23

ஜனாதிபதி நாடாளுமன்றை கலைத்து வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலை வலு விழக்கச் செய்யக்கோரி ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் சார்பில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவில் ஜனாதிபதி சார்பில் சட்டமா அதிபரும், பிரதிவாதியாக பெயரிடப்பட்டுள் ளார். சட்டத்தரணி தினேஷ் விதான பத்திரண ஊடாக தாக் கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவில், அரசமைப்புக்கு அமைய நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு மூன்று மாதங்களுக்குள் பொதுத் தேர்தல் நடத்தப்பட்டு புதிய நாடாளுமன்றம் கூட்டப்படல் வேண்டும்.

அதன்படி ஜனாதிபதி கடந்த மார்ச் 2 ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட நிலையில் தேர்தல் ஏப்ரல் 25 ஆம் திகதி இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்ததாகவும் மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார். எனினும், தற்போது அந்தத் திகதி ஜுன் 20 என்று குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் அது அரசமைப்பை மீறும் நடவடிக்கை என்றும் அதனால் ஜனாதிபதியின் வர்த்தமானியை வலுவற்றது என்று அறிவிக்குமாறும் அகிலவிராஜ் காரியவசம் தனது மனுவில் கோரியுள்ளார். (த)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.05.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.